Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~12

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 26 | 09-06-2003 | திங்கட்கிழமை | ஓசை 111

வவுனியா நகரில் தரங்குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்
கணேசா நகையகம்
வவுனியா
(சி-7865)

## தமிழைப் பிறமொழிக் கலப்பிலிருந்து காக்கவே தலைவர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கினார்

### திருக்குறள் விழாவில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் எமது மண்ணை மீட்பது போல தமிழ்மொழியை பிற மொழிக் கலப்பில் இருந்து மீட்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார் என தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமான திருக்குறள் விழாவில் இடம் பெற்ற கருத்தரங்கில் பங்குகொண்டு சிறப்புரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் வளர்ச்சிக்கழகம் ஊடாக எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற வகையில் அதை மூச்சாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஆட்களின் பெயரைத் தமிழில் வைக்க வேண்டும். தெருக்களின் பெயரை தமிழில் வைகக வேண்டும். வணிக நிலையங்களின் பெயரை தமிழிலே வைக்க வேண்டும். எல்லோரும் எப்போதும் பிறமொழி கலந்திட்ட வார்த்தைகளைப் பேசிக் கொள்ளாத வகையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் செயற்பட்டுக் கொண்டுள்ளது.

தமிழ் மொழி தூய்மையைப் பேண வேண்டியதன் இன்றியமையாமையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எமது கடந்த கால வரலாறு எமது மொழி எவ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் பலி

மன்னாரில் நேற்று ஏற்பட்ட வீதி விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அன்ரநிக்சன் (வயது18) என்பவரே உயிரிழந்தவராவார். தலைமன்னாரில் இருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்துடன் மோதியதிலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது. பிரஸ்தாப இளைஞன் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## நோர்வேயின் ஈடுபாடு தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது

### கண்காணிப்புக் குழு மீதும் அதிருப்தி தெரிவிக்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் ஈடுபாடு தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாக சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார். அத்தோடு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையும் தமக்குத் திருப்தியளிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.**

மேலும் இது குறித்து செய்தியாளரிடம் உரையாற்றுகையில், சமாதானப் பேச்சுக்களில் நோர்வே வரம்பு மீறிச் செல்வதாகவும் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்த அவரசகாலச்சட்டம் காலாவதியாகிவிட்டது இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை என்றும் கூறினார்.

இதேவேளை, சனாதிபதியின் இரு ஆலோசகர்களான லக்ஷ்மன் கதிர்காமர், அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் ஒருவர் கருத்தை மற்றவர் மறுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் அமைச்சுப் பொறுப்புகளை மீளப் சில பெற்றுக் கொள்வார் என அநுரா பண்டாரநாயக்கா கூறிவருகிறார்.

இக்கூற்றைக் கதிர்காமர் மறுப்பதுடன் அது அநுராபண்டார நாயக்காவின் தனிப்பட்ட கருத்தெனக்கூறியுள்ளார்.

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இன்று ஆரம்பம்

(டோக்கியோ)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இரண்டு நாள் மாநாடு ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இன்று காலை ஆரம்பமாகின்றது.

ஜப்பானியப் பிரதமர் சிறிலங்காப் பிரதமர் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் ஜப்பானியப் பிரதமர் ஆரம்ப உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசின் இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பான யோசனையை மாநாட்டில் முன்வைக்கவுள்ளதுடன் இலங்கைக்குக் கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போராளி ஒருவர் திருமலையில் கைது

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கி மற்றும் மூன்று கைக்குண்டுகளை இவர் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை நிலாவெளிப் பகுதியில் கைது செய்யப்பட்ட இவர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## டோக்கியோவில் ரணிலிற்கு எதிராக சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்தவிகாரை ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மேற்படி விகாரையில் தங்கக் கோபுரத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜே.வி.பி.யைச் சேர்ந்த ஆதரவாளர்களே இவ்வார்ப்பாட்டத்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் ஜப்பானிய பொலிசாரால் ஆர்ப்பாட்டம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## டோக்கியோ சென்ற விமானத்தில் புலிகளுக்கு 7 ஆசனங்கள் ஒதுக்கீடு

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் பங்கு பெறும் வகையில் சிறிலங்கா அரச தரப்பு பயணம் செய்த விமானத்தில் விடுதலைப்புலிகளுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடைசி நேரத்தில் விடுதலைப் புலிகள் தமது முடிவை மாற்றிக் கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கையில் அந்த விமானத்தில் ஏழு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதேநேரத்தில் இறுதி நேரம் வரையில் ஏழு விசாக்கள் ஜப்பானிய தூதரகம் தயார் நிலையில் வைத்திருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிஹல உறுமய வருந்துகிறது

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு விடுதலைப்புலிகளை சர்வதேச நாடுகள் வற்புறுத்தி வருவது வருந்தத்தக்கது என்று சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ண கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பிரதமரையும் சர்வதேச நாடுகளையும் மதிக்கவில்லை என்று சாடியுள்ளார்.

## சகோதரனின் தாக்குதலில் யாழ். நகரில் ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் முத்திரைச் சந்திப் பகுதியில் சகோதரர் ஒருவரால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிருஷ்ணராசா சிறிதரன் (வயது-37) என்பவரே அவரது தம்பியாரால் தாக்கப்பட்டதாகவும், இதன்போது தலையில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டவேளை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே இவர்கள் இம்மோதல் சம்பவத்தில் ஈடுபட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

## கிராம சேவகரும் மற்றொருவரும் கைக்குண்டுவீச்சில் படுகாயம்

(திருமலை)

திருகோணமலையில் நேற்று இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுத்தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

திருமலை பிரதான வீதியின் மடத்தடிச் சந்தியை அண்மித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது வீட்டு உரிமையாளரும் மற்றொருவரான கிராமசேவை அதிகாரிஒருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இக் குண்டு வீச்சு நடைபெறுவதற்கு முன்னர் கிராமசேவை அதிகாரியுடன் உரையாடிக்கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் உரையாடல் முடிவடைந்து கிராமசேவை அதிகாரியை வழியனுப்ப வீட்டின் வெளி வாசலுக்குச் சென்ற வேளையிலேயே இந்தக் குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது.

## கிளி.யில் திருக்குறள் மாநாடு நேற்று சிறப்புற ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரு நாட்கள் திருக்குறள் மாநாட்டின் முதல் நாள் அமர்வு நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்றது.

காலை 11.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற தலைப்பிலும், முனைவர் எசு. சிவலிங்கராசா 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்ற தலைப்பிலும், திரு. பொன். கணேசமூர்த்தி 'செல்வத்தை தேய்க்கும் படை' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

அத்துடன் திரு. ந. விசயசுந்தரம் 'தன்னையே கொல்லும் சினம்' என்ற தலைப்பிலும், திருமதி பி. மதுரநாயகம் 'வள்ளுவரும் இளங்கோவும்' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்.

அடுத்து விருந்தினர் உரையை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி. முல்லை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை தேவசகா

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமாகிய திருக்குறள் மாநாட்டில்.......

# சிறில.பொலிசாரின் கொடூரத்தால் பார்வையிழந்த தமிழ் இளைஞன் நட்டஈடு கோரி வழக்கு

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு மிகக் குரூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டதில் தனது இரு க்ண் களையும் இழந்த மன்னாரைச் சேர்ந்த ஸ்ரீசெல்வன் அன்ரன் என்பவர் நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். 1998 மார்ச் 20 ஆம் திகதி காலை புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக வைத்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் ஸ்ரீசெல்வனைக் கைது செய்துள்ளனர். கண் களைக் கட்டி இனங்காண முடியாத இடத்திற்கு கூட்டிச் சென்றனர். அங்கு இவரைத் தாக்கிய பொலி ஸார் பெற்றோல் நிரம்பிய பைப் பொன்றினுக்குள்ளும் தலையை இட்டு சித்திரவதை செய்துள்ளனர்.

அதன் பின்னர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டு. அங்கும் தடிகளால் தாக்கியும், சிகரெட்டினால் சுட்டும், பெற்றோல் நிரம்பிய பைப்பினுள் தலையை அமிழ்த்திக் கட்டி வைத்து தாக்கிய பின்னர், 1998 ஜுன் 5 ஆம் திகதி மனுதாரரை நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளனர். பின்னர் அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் 2001.06.25 ஆம் திகதி ஸ்ரீசெல்வன் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி முன் ஆஜர் செய்யப்பட்டபோது, இவரின் இரு கண்களும் குருடாகியுள்ளதும் காயங்களிற்கு மருத்துவ சிகிச்சை செய்யப்படாததும் உறுதிப்படுத்தப் பட்டது. ஸ்ரீசெல்வன் பார்வையிழந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால், ஸ்ரீசெல் வனுக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டிருந்த வழக்கை அரச தரப்பு சட்டத் தரணிகள் வாபஸ் பெற்று ள்ளனர். இந்நிலையில் ஸ்ரீசெல்வன் 50 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாணவர் கல்வி நிதியம் அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

கல்வியில் நலிவுற்ற மாணவர் களை மேம் படுத்தும் பொருட்டு தியாகி அறங்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் முல்லைத்தீவு மாவட்டத்திலும் வங்கி நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள மேற்படி வங்கி நிதியம் முல்லைத்தீவு இளங்கோ புரம், முள்ளிவாய்க்கால் மேற்குக் கிராமங்களைச் சேர்ந்த கல்வியில் நலிவுற்ற மாணவர்களிற்கு முதற் கட்டமாக நாற்பது மாணவர்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் கிராமிய வங்கியினூடாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைமாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் இ.மாறன் முல்லை மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலா, சோதியா படையணியைச் சேர்ந்த மாங்கனி, முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அன்பரசி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சேமிப் புப் புத்தகங்ளை வழங்கினர். (பா)

# தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து ரணிலின் கோரிக்கை சந்திரிகாவால் நிராகரிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான ரணிலின் கோரிக்கையை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

டோக்கியோ மாநாட்டுக்குப் புறப் பட்டுச் செல்லும் முன் சனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசிய போதே இவ்வாறு அவர் நிராகரித்துள்ளார். தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதை யடுத்து ரணில் இப் பிரேரணையை வலியுறுத்தி முன் வைத்ததாக அறிய வருகிறது. தேசிய அரசாங்கம் அமைப்பது வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகலாம் எனக் கருதிய ரணில் விக்கிரமசிங்க வின் இக்கருத்தை சனாதிபதி முற்றாக நிராகரித்து விட்டார்.

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்குத் தானோ தமதுகட்சியினரோ இடையூறாக இருக்கமாட்டோம் எனக்கூறும் சனாதிபதி இதற்கான முழு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். பிரதமர் சமாதான வழிகளைத் தொடரலாம் என்றும் கூறியுள்ளார். எல்லாம் முடிந்த பிறகு தேசிய அரசு எதற்கு எனவும் அவர் வினா எழுப்பியிருக்கின்றார். முன்னதாக இவ்வரசு பொ.ஐ.மு.ஆதரவாளர்கள் மீது தவறாக நடந்து கொண்டுள்ளது எனவும் பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.மு.விமர்சித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் நாடாளுமன்றக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"சிறுவர் நாடாளு மன்றக் கூட்டம்" ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பங்கு பற்றினர்.

காலை10.00 மணிதொடக்கம் பிற் பகல் 2.00 மணிவரை இப்பாராளுமன்றக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் அமைச்சர்களான தி. மகேஸ்வரன், ஜெயலத் ஜெயவர்த்தனா ஆகியோர் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் இவர்கள் யாழ். குடா நாட்டில் இருந்தும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள வில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# சாரண ஆசிரியர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

சாரணிய ஆசிரியர்களுக்கான சின்னம் சூட்டும் விழா கடந்த 27ம் திகதி மு/உடையார்கட்டு மகாவித்தியாலய மண்டபத்தில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் தலைமையில் ஆரம்பமானது. வலயக் கல்விப்பணிமனையைச் சேர்ந்த ஐ.கே.தவரட்ணம், உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) சாரண உதவி ஆணையாளர் வே.ஜெயம் சபாபதி ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள். ஆசிரியர்களுக்கான சின்னங்கள் ஆர்.புவனேந்திரன், பயிற்சி ஆணையாளர், திருமதி. சேவியர் குருளைச் சாரண ஆணையாளர் ஆகியோரால் வழங்கப்பட்டது. இதில் 28 ஆசிரியர்கள் சின்னங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# உலக சூழல் தினத்தை முன்னிட்டு 'பார்த்தீனியம்' சிரமதானம் மூலம் அழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் உலக சூழல் தினத்தினையொட்டி "பார்த்தீனியம்" களை அகற்றும் சிரமதானப் பணி இடம் பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வு கடந்த 06ஆம் திகதி ஒட்டுசுட்டான் கிராம சேவையாளர் பிரிவில் காலை 10 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் பார்த்தீனியம் களை பற்றி உதவிப்பணிப்பாளர் விளக்கவுரை நிகழ்த்தினார். 12.30 மணிவரை இடம்பெற்ற இச்சிரமதானப் பணி மூலம் ஒரு ஏக்கர் வரையான பார்த்தீனியம் களைகள் அகற்றப்பட்டு முற்றாக எரித்து அழிக்கப்பட்டது. இச்சிரமதானப் பணியில் சமளங்குளம் கமக்கார அமைப்பினர் பொதுமக்கள், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

# - பாடசாலைக்கு வழங்கப்படும் - அன்பளிப்புத் தொகை குறித்த விபரம் வெளியிடப்பட வேண்டும்

ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது பெற்றோர் பாடசாலைக்கு வழங்கும் அன்பளிப்பு தொகைகள் குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களால் சகல விபரங்களும் அறிவித்தல் பலகையில் தொங்க விடப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட விபரங்களை வெளியிடாததால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# வடகிழக்குமாகாண பாடசாலைகளில் நூலக அபிவிருத்திக்கு நடவடிக்கை

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணபாடசாலைகளில் நூலக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திப் பிரிவு ஒரு கோடி எழுபது லட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

இந்த நிதியில் இருந்து வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளின் நூலக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் 77புதிய நூலக கட்டடங்களும் 206 புனரமைப்பு செய்யப்பட்ட கட்டடங்களுமாக 283 பாடசாலைகளில் நூலக கட்டடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவித்திட்டத்தின் கீழ் பாடசாலை நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களும் 42 பாடசாலைகளுக்கு கணணிகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேலும் 300 பாடசாலைகளுக்கு புத்தகங்கள் வழங்கப் படவுள்ளன. பாடசாலை நூலகங்களுக்கு பொறுப்பாக 315 ஆசிரிய நூலகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கு ஐந்து நாள் வதிவிடப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் நூலக அபிவிருத்தி செயற்பாடுகளும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆசிய நூலகங்களுக் கூடாகவே அமுல் படுத்தப்படவுள்ளன.

## பெற்றுக் கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் இரு வேறு இடங்களில் கண்டெடுக் கப்பட்ட ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி பிரதான வீதியில் கண்டெடுக்கப்பட்ட யோர்த்திகேசு கருணேஸ்வரன் என்பவரது அடையாள அட்டை சி.பத்மநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு மேற்படி பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

அடுத்து கனகபுரத்தைச் சேர்ந்த மனோர்லிங்கம் இருதயரூபி என்பவரது தேசிய அடையாள அட்டை மற்றும் நிரந்தர பயண அனுமதி அட்டை, புகைப்படங்கள் என்பனவும் பாரவூர்திகள் சங்கத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்டு எமது விளம்பரப் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

## விசாகப் பொங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கணேசபுரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா இன்று பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் பகல் 12.00 மணிக்கு அம்மனுக்கு விசேட பூசையும் பகல் 1.00 மணிக்கு அன்னதானமும் நாளை 10ம் திகதி அதிகாலை கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

சந்ஜெய இராணுவ நடவடிக்கையின் பின் மேற்படி ஆலயம் புனரமைக்கப்பெற்று கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## போட்டி விதிமுறைகள் நூல்கள் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

விளையாட்டுக்கள் பற்றிய விதிகளையும் பயிற்சி முறைகளையும் உள்ளடக்கிய நூல்கள் தமிழ் மொழியில் வெளிவரவுள்ளது.

முன்னாள் கலாசாலை உடற் கல்வி விரிவுரையாளரும், யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியருமான ம.பத்மநாதன் அவர்களின் உடைமையந்தின் யுத்திகளும் நுட்பங்களும், மெய்வல்லுனர் திடகளப் போட்டி விதிகள், கரப்பந்தாட்ட விதிகள் ஆகிய இம்மூன்று நூல்களும் இம்மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக தமிழீழ விளையாட்டுத் துறையினர் தெரிவித்துள்ளனர். (பா)


## பெயர்மாற்றம்

உப்புமாவெளி அளம்பிலைப் பிறப்பிடமாகவும், காக்கைக பணிக்கன்குளம் ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் உள்ள பிச்சை இராசதுரை ஆகிய நான் 09 – 06 – 2003இல் இருந்து பிச்சை கவியரசன் என பெயர்மாற்றம் செய்துள்ளேன். எனவே எத்தேவைக்கும் இப்பெயரே பாவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(2286) ப.பி. கவியரசன்



## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
01
1937



மறைவு
16
06
1997

அமரர்
சரவணை செல்லத்துரை
(உரிமையாளர் நியூபாம் ஹவுஸ், வவுனியா)

திதி:09 -06-2003

எம் அருமை அய்யா
செல்வமிகுதும் துணிவேறி நின்று
குடும்பத்தின் தலைவராய், தந்தையாய்
மனம்பல மாண்புடன் பரப்பி
மாண்பும் போற்றிட வாழ்ந்து
இனி நிமலாம் இன்புடன் வாழ
நாற்று நற் பணிகள் காத்து
எம் இனிய தந்தைக்கு
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலியை
கண்ணீர்ப் பூக்களாக
சமர்ப்பிக்கின்றோம்.

தகவல்:
சி. நாகராஜா (வில்வா),
நமனி கட்டடம்,
வவுனியா.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

தொலைபேசி இல: 024-22429 (சி-7943)

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 06 ஜேர்மன் படையினர் பலி; 29 பேர் காயம்

ஆப்கானிஸ்தானின் காபூலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலை குண்டுத் தாக்குதலில் ஆறு ஜேர்மன் படையினர் பலியானதுடன் மேலும் 29 பேர் காயமடைந்துள்ளனர்.


படுகாயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் இத்தாக்குதல் அல்கொய்தா இயக்கத்தினருக்கு தொடர்பு இருப்பதாக ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் படையினர் ஆப்கானிஸ்தானில்பல்தேசிய அமைதி காக்கும் படையில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

சர்வதேச பாதுகாப்பு படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்ற அல்கொய்தா இயக்கமும் ஏனைய குழுக்களும் முயற்சிசெய்து வருகின்றன.

எந்தவகையிலும் ஆப்கானிஸ்தானில் ஸ்திரமான நிலைதோன்ற ஜேர்மன் படைகள் உதவி புரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



குண்டு வெடிப்பு நடந்த இடத்தை நோக்கிச் செல்லும் சர்வதேச உதவிப் படையினரின் உலங்குவானூர்தியையும் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான ஜேர்மன் சமாதான படையினரை ஏற்றிச்சென்ற பேருந்துவண்டி பாரம் தூக்கியால் தூக்கப்படுவதையும் படங்களில் காண்க.

# ஐரோப்பிய யூனியனில் இணைய விரும்பாத போலந்து மக்கள்!

போலந்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கொள்வது குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச வாக்கெடுப்பில் 17.6 சதவீதமான வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

போலந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்து கொள்ள வேண்டுமானால் இரண்டு கோடி தொண்ணூறு இலட்சம் வாக்காளர் தொகையில் ஐம்பது சதவீதமானோர் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல் தின வாக்கெடுப்பை அடுத்து நேற்று வாக்கெடுப்புகள் இடம்பெற்றன.

சர்வசன வாக்கெடுப்புக்கு முன்னர் இடம்பெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பின் போது நான்கு பேரில் மூன்று பேர் போலந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஐம்பது சதவீதத்திற்குக் குறைவானோர் சர்வசன வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்கெடுக்கத் தவறினால் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும்.

# ஆங்சான் சுகியின் கைதுக்கு கனடா கடும் கண்டனம்

(ஒட்டோவா)

மியன்மார் எதிர்க்கட்சித் தலைவி தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று கனடா கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளுடன் உறவுகளைச் சீர்செய்துகொள்ளும் மியன்மாரின் முயற்சிக்கு இந்த நடவடிக்கை குந்தகமாக அமையும் என்று கனடா எச்சரிக்கை செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சுகியின் ஆதரவாளர்களுக்கும் அரசாங்க ஆதரவாளர்களுக்கும் இடையே ஒரு வாரத்திற்கு முன்னர் ஏற்பட்ட மோதல்களை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைக்காக சுகி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் மோதல் சம்பவங்களின் போது அவர் காயமடைந்திருக்கலாம் என்று ராஜதந்திரிகளும் அதிருப்தியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

முன்னர் பர்மா என்று அழைக்கப்பட்ட மியன்மாரின் கனடா தூதுவரை கனடாவின் வெளிநாட்டு அமைச்சர் பில்கிரகாட் சந்தித்து தமது நாட்டின் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்.

# ஈராக்கில் புதிய அரசமைப்பதில் நெருக்கடி எதிர்ப்பலைகளால் அமெரிக்கா திண்டாட்டம்

**ஈராக்கில் புதிய அரசொன்றை அமைக்கும் விடயத்தில் அமெரிக்க நிர்வாகம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. ஈராக்கிலுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் படைகளை வெளியேறுமாறு கோரி இடம்பெறும் போராட்டங்கள் வலுப்பெற்று வரும் நிலையில் இவ்வாறான நெருக்கடி எதிர்நோக்கப்பட்டுள்ளது.**

ஈராகிலுள்ள அமெரிக்கப் படைகள் வெளியேற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் ஈராக்கியர்கள் அமெரிக்கப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்த பின்னர், அந்நாட்டை அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

ஆனால் அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு ஈராக்கியர்கள் அவ்வப்போது கூட்டுப் படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கப்படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ஈராக்கியர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கில் சனநாயக அரசை அமைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டதையடுத்து தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அதிகமாக வாழும் ஷியாமுஸ்லிம்கள் தங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் சதாம் ஹுசைனின் ஆட்சியின் போது ஷியா முஸ்லிம்கள் அல்லாத முஸ்லிம்கள் மத்திய பொறுப்புக்களை வகித்து வந்துள்ள நிலையில் தற்போது அமைச்சரவை ஊழியர்களைக்கொண்ட புதிய நிர்வாக இயக்குனர்களைத் தெரிவு செய்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் புதிய நிர்வாகத்தை அமைக்கும் வகையில் குர்திஷ், ஷியா, கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட 35மதத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க கூட்டணிநிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதனிடையே ஈராக்கில் அமெரிக்காவின் அணுவாயுத நிபுணர்கள் நேற்று முன்தினம் சோதனைகள் மேற்கொண்டுள்ளனர்.

அப்போது அங்கிருந்து காணாமல் போனதாகக் கருதப்படும் அணுவாயுதப் பொருட்கள் குறித்து அவர்கள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



இந்தியாவில் உத்தராஞ்சல் மாநிலத்தில் த்வாராட் கிராமத்திற்கண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீ (4 சிறார்கள் உட்பட 6பேர் இதில் மாண்டனர்)



ட்ரைபல் கிளர்ச்சியாளர்களுடன் அண்மையில் புதிதாக ஏற்பட்ட மோதலின் போது கொங்கோ குடியரசில் பணியா நகரில் நிலையெடுத்துள்ள போர்வீரர்கள்.

# வடகொரிய அணுவாயுதத் திட்டத்தை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது

## - தென்கொரியா, ஜப்பான் கூட்டாக எச்சரிக்கை

(டோக்கியோ)

வடகொரியா எந்த விதத்திலும் அணுவாயுதத் திட்டத்தை மேற்கொள்வதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அறிக்கைமூலம் தென் கொரியாவும் ஜப்பானும் கூறியுள்ளன.


தென்கொரிய சனாதிபதியும், ஜப்பானிய பிரதமரும் டோக்கியோவில் உச்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்ட பின்னர் நேற்று இவ்வாறு கூறியுள்ளனர்.

எனினும் வட கொரியாவுடனான அணுவாயுத நெருக்கடியை சமாதான முறையில் தீர்த்துக் கொள்வது பற்றி இரு சாராருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

ஜப்பானிய பிரதமர் செய்தியாளர்களிடையே இது பற்றிப் பேசுகையில், பியாங்யாங் நெருக்கடியை தீவிரப்படுத்துமாயின் கடுமையான போக்கு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

அதேவேளை தென்கொரிய தலைவர், தனது அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்தி வரும் என்று கூறியுள்ளார்.

தென் கொரிய சனாதிபதி ஜப்பானில் 04 நாட்கள் விஜய மொன்றை மேற்கொண்டிருந்தார்.



பங்களாதேஷ் டாக்காவில பெய்து கடும் மழைக்கு தாக்குப் பிடிக்கும் ரிக்ஷா வண்டி இழுப்பவர்.

# உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல .1846-SRI(SF)

# கேள்வி கோரல்-இல 04

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின்(NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம்(ரூபா) | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம்(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | MU/NECORD/ED/01 | முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டடத்தை நிறைவு செய்தல் | 1,000 | M7 | 25,000 |
| 02 | MU/NECORD/ED/03 | முல்/சிலாவத்தை இ.த.க பாடசாலையில் இரண்டு 110'x25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M7 | 35,000 |
| 03 | MU/NECORD/ED/05 | முல்/புதுக்குடியிருப்பு கணேசா வித்தியாலயத்தில் மூன்று 110'x25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M6 | 55,000 |
| 04 | MU/NECORD/ED/25 | முல்/முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் 110'x25' மாடிக் கட்டடம்,இரண்டு பிரிவு விஞ்ஞான ஆய்வுகூடம்,90'x25' கட்டடத்தை நிறைவு செய்தல், 150'x30' பிரதான கேட்போர் கூட திருத்த வேலைகள் | 1,000 | M6 | 90,000 |
| 05 | MU/NECORD/HS/04 | ஒலுமடு சித்த ஆயுர்வேத மருந்தக கட்டட நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 06 | MU/NECORD/LS/01 | முல்லைத்தீவு மிருக வைத்தியர் அலுவலகம்,விடுதி நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 07 | MU/NECORD/LS/02 | ஒட்டுசுட்டான் மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி மீள் நிர்மாணம் | 1,000 | M6 | 60,000 |
| 08 | MU/NECORD/FI/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது கிராமங்களில் மீனவர்களுக்கான ஓய்வு அறை கட்டுதல். | 1,000 | M7 | 50,000 |
| 09 | MU/NECORD/ID/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்களுக்கான 10 அறை கொண்ட விடுதி அமைத்தல். | 1,000 | M6 | 65,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின்(NCCASL) உறுப்பினராக (ICTAD) டுடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் , கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   - IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
   - VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும், ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஒப்பந்த ஆவணங்களை 2003 யூன் 23ம் திகதியிலிருந்து 2003 யூலை 04ம் திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டம் ஒன்று, இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2003 யூலை 02 முற்பகல் 10.30 க்கு நடைபெறும்.

08. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் **தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2003 யூலை 11 முற்பகல் 10.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்குக் கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு,அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாகமாட்டார்.

**திருமதி. இமெல்டா சுகுமார்**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி.8142)

# சோழர் சிறுவர் ஊட்ட மேம்பாட்டுப்பூங்கா



சிறிலங்கா அரசாங்கங்கள் விதித்திருந்த அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை இராணுவ நடவடிக்கைகள் எப்பொழுதும்விரைந்த தாக்கத்தை சிறுவர்களிடமே ஏற்படுத்தி வருகின்றது.

இதன் காரணமாக சிறுவர்கள் உடல் உள வளர்ச்சி குன்றித் உளத்தாக்கங்களால் பாதிப்புற்று எதிர்காலம் இன்றி தவிக்கும் ஒரு சமூகத்தையே இந்த மண்ணில் உருவாக்க அந்த அரசுகள் பிரயத்தனம் செய்தன.

ஆரோக்கியமுள்ள எதிர்கால சமூக நிர்மாண வளர்ச்சிக்காகக் கிராமரீதியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சமூக மேம்பாட்டு நிறுவனம் சிறுவர் பூங்காக்களை நிறுவி சிறுவர்களுக்கு போசாக்கு உணவு ஊட்டலோடு கல்வி, விளையாட்டு, கலை அம்சங்கள் அடங்கிய பாடத்திட்ட செயலாக்கத்தினையும் மேற்கொண்டு வருகின்றது.
யுத்த பூமி ஒன்றில் பெரிதும் பாதிப்புக்குள்ளாபவர்கள் குழந்தைகளும் பெண்களுமே ஆவர். பொருளாதாரத்தடை ஏனைய தடைகள் இங்கு அமுல்படுத்தப்பட்ட போது போசாக்கின்மை குறிப்பாக குழந்தைகளையே மிகப் பெரிய அளவில் பாதிப்பினை ஏற்படுத்தியது.

விசுவமடு இளங்கோபுரம் சோழர் பராமரிப்புப் பூங்கா



பாதிப்புற்ற குழந்தைகளுக்காகக் கடந்த பத்து ஆண்டுகளாக அளப்பரிய பணியை ஆற்றி வருகின்றது.

1977ஆம் ஆண்டு ஆனிமாதம் ஏற்பட்ட இனக்கலவரத்தால் இடம் பெயர்ந்து குடியமர்ந்த கிராமமே இளங்கோபுரம் றெட்பானா நிறுவனத்தின் உதவியுடன் இம்மக்கள் குடியமர்ந்தனர்.

இப்பகுதி வாழ் மக்கள் நாளாந்த கூலித் தொழில் செய்தே தமது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர்.

இடம் பெயர்ந்த காரணத்தாலும் பாடசாலை அருகில் இல்லாததாலும் கல்வியைத் தொடர முடியாமல் பல குழந்தைகள் இன்னல்பட்டனர். இதனால் கல்வி அறிவிலே மிகக் குறைந்த மக்களாகவும் காணப்பட்டனர்.

இக்கிராம மக்கள் மிகவும் வறுமையானவர்களாக இருந்தமையால் சிறார்கள் போசாக்கற்றவர்களாக இருந்தனர்.

இதனை கருத்திற்கொண்டு றெட்பானா உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர் பகல் போசாக்கு பராமரிப்பு இல்லமாகத் தெரிவு செய்யப்பட்டு இயங்கிவந்தது.

இவர்களின் உதவித் திட்டக் காலத்தின் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் உதவியுடன் முன்பள்ளியாக இயங்கி வந்தது.

இளங்கோபுர கிராம மக்கள் நாளாந்த கூலித் தொழிலுக்குச் செல்வதால் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் பராமரிப்புக்கள் இன்றி போசாக்கற்ற நிலையில் இருந்தனர்.

இக்குழந்தைகளைப் பராமரிப்பதற்காக மூத்த சகோதரர்கள் கல்வியைத் தொடராது வீட்டில் இருந்தனர்.

இதனைக் கவனத்திற்கொண்டே 1993ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28ஆம் திகதி சோழர் குழந்தைகள் இல்லம் என்ற பெயரில் இப்பூங்காவினை தமிழீழ அரசியல் துறையினர் ஆரம்பித்து வைத்தனர்.

இக்கிராமத்தில் பாடசாலை இல்லாததால் பூங்காவில் பயன்பெற்று ஐந்து வயது பூர்த்தியடைந்த சிறார்கள் தொடர்ந்தும் தமது கல்வியினை பூங்காவிலேயே பெற்றனர். ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு நான்கு வரை பாரதி வித்தியாலயத்தில் பதிவு செய்யப்பட்டு மாணவர்கள் பூங்காவில் கல்வி பெற்றனர்.

1997ஆம் ஆண்டு பங்குனிமாதம் 27ஆம் திகதி கிராமமக்களின் முயற்சியின் பயனாக கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு இக்கிராமத்தில் தேராவில் தமிழ் வித்தியாலயம் நிறுவப்பட்டது.

அதன்பின் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மாத்திரம் பூங்காவில் பயன் பெற்றனர். வருடாவருடம் வைகாசி 28 ஆம் திகதி விளையாட்டு விழாவும் வருட இறுதியில் கலை விழாவும், மாவீரர் நினைவு நாட்கள் என்பனவும் சிறப்பான முறையில் இப்பூங்காவில் கொண்டாடப் படுகின்றன.

பூங்காச் செயற்பாட்டினால் பயன் பெறும் சிறுவர்கள் நற்பண்புள்ளவர்களாகவும் சுகாதாரப் பழக்கவழக்கமுடையவர்களாகவும் போசாக்கானவர்களாகவும் கல்வியிலே ஆர்வம் உடையவர்களாகவும் திகழ்கின்றனர்.

இங்கு பயன்பெறும் சிறுவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகளுக்கும் நெருங்கிய உறவு இருப்பதால் அவர்களின் குடும்ப நிலையும் முன்னேற்றமடைந்து வருகின்றது.

இரண்டு ஏக்கர் நிலப்பரப்பினை உடைய இப் பூங்காக் காணியில் தென்னை, மா, பலா, தேசி, முருங்கை, புளி போன்ற பயன்தரு மரங்கள் இருக்கின்றன. இரண்டு வகுப்பறைகளும், அலுவலகம், சமயலறை, மலசலகூடம், கிணறு என்பனவும் இங்கு உள்ளன.

1993 ஆம் ஆண்டு 35 சிறார்கள் பயன்பெற்ற இப்பூங்காவில் சிறுவர்கள் தொகை வருடாவருடம் அதிகரித்து இவ்வருடம் இப்பூங்காவில் 130 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர்.

நாளாந்தம் ஒரு குழந்தைக்கு 25 ரூபா வீதம் செலவு செய்யப்படுகின்றது. மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 65 ஆயிரம் ரூபா செலவு செய்யப்படுகின்றது.

காலை எட்டு மணிக்கு பூங்கா கொடி ஏற்றலுடன் ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக உடற் பயிற்சி, கடவுள் வணக்கம், காலை உணவு, சுத்தம் பார்த்தல், தன்னைப்பற்றியும் சூழலைப் பற்றியும் அறியச் செய்தல், பால் வழங்கல், கற்பித்தல் கற்றல் செயற்பாடு,மதிய உணவு, ஓய்வு(நித்திரை), உடற் சுத்தம், விளையாட்டு, மாலை உணவு ஆகிய செயற்பாடுகள் தொடராக இடம்பெற்று மாலை 4.30 மணிக்குக் கொடி இறக்கத்துடன் நற்பழக்கங்கள் கூறி வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

சோழர் சிறுவர் ஊட்ட மேம்பாட்டுப் பூங்காவில் ஆரம்பத்தில் இருந்தே நூறு குழந்தைகள் சராசரியாகப் பயன் பெற்று வருகின்றனர். சுகாதார நிலையினைப் பொறுத்தவரையிலும் இந்த [illegible] பூங்கா ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

இந்த நிர்வாகத்தின் [illegible] உணவின் தரமும் சிறப்பாக உள்ளமை மட்டு[illegible] இக்குழந்தைகளின் பெற்றோரும் தம் குழந்தைகளினூடாகத் தம்மையும் சுகாதார நிலைக்கு உட்படுத்தியுள்ளது இம்முறைகளை இல்லத்தினூடாக தம்மையும் தம் கிராமத்தையும் முன்னெடுத்து விட்டமையை[illegible] காட்டுகின்றது.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற நோக்கம் இப்பூங்காவில் நிறைவேற்றப்படுகின்றது. இன்னும் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கும் இக்காலங்களில் இப்பூங்கா தனது சிறப்பான சேவையை செய்து வருகின்றது.

வண்ணக் கனவுகளுடன் வளரும் சின்னஞ் சிறார்களை மண்ணில் [illegible] வைக்கும் மாண்புமிகு பணி தொடர்ந்தும் இடம்பெற [illegible]டும். □□□

அர்ச்சனா

---

# சமஷ்டி அமைப்பு முறையை வழங்குதல்கூட இன்று கேள்விக்குறியாக இருக்கிறது

## - அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவிப்பு

தமிழீழத் தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது சுயநிர்ணய உரிமை பற்றிக்கூடப் பேசாமல் சமஷ்டி அமைப்பு முறை பற்றிப் புலிகள் பேச ஆரம்பித்துள்ளனர். இருப்பினும் சமஷ்டி அமைப்பு முறை கூட இன்று கேள்விக் குறியாக வுள்ளது. இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

டென்மார்க் தமிழ் இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்த தமிழ் இலக்கிய விழாவை அமைச்சர் சந்திரசேகரன் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் அவர்களது நாளாந்தப் பணிகளுக்கு மத்தியிலும் கலாச்சார பாரம்பரியங்களை முன்னெடுத்துச் செல்கின்றமை பாராட்டுக்குரியது.

சனநாயக ரீதியில் இனப் பிரச்சினைக்குப் பாராளுமன்றத்தில் தீர்வு காணக் கூடிய சாத்தியம் இல்லை என்ற படியால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமானது.

தமிழீழத் தாயகம் என்ற கோட்பாட்டில் விடுதலைப் புலிகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது சுயநிர்ணய உரிமை பற்றிக் கூடப் பேசாமல் சமஷ்டி அமைப்பு முறைபற்றி அவர்கள் பேச ஆரம்பித்துள்ளனர். இருந்த போதிலும் சமஷ்டி அமைப்பு முறை கூட இன்று கேள்விக் குறியாக உள்ளது.

இனவாத அரசியல் வாதிகளினால் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டால் தமிழீழ விடுதலை புலிகளின் நிலைப்பாட்டை புலம் பெயர்ந்த மக்கள் அங்கீகரிப்பதை விட வேறு வழிகிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# ஏ—9 வீதி விபத்தில் 4 வயதுச் சிறுவன் பலி!

கனகராயன் குளம் ஏ-9 பாதையில் ஏற்பட்டவீதி விபத்தில் நான்கு வயதுச்சிறுவன் ஒருவன் பரிதாபகரமான நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி ச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோட்டார் சையிக்கிள் ஒன்று மோதியதில் துவி[illegible]வண்டியில் பயணம் செ[illegible]கராயன் குளத்தைச் சே[illegible]காதரன் (வயது4) [illegible] (வயது42) ஆகிய இருவ[illegible] படுகாயமடைந்த நி[illegible] வவுனியா ஆதாரவைத்திய[illegible]யில் அனுமதிக்கப்பட்டு [illegible] சிறுவன் உயிரிழந்துள்[illegible] வவுனியா வைத்தியசாலை [illegible] பதிவு விசாரணை அதி[illegible] தெரிவித்துள்ளார். (பா)

# குடாநாட்டிலுள்ள நிலத்தடி நீர் மனிதப் பாவனைக்கு உகந்ததல்ல!

## - பரிசோதனை அறிக்[illegible] தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர் பரிசோதனையின் அடிப்படையில் யாழ் நகரை அண்டிய பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள நீர் மனித பாவனைக்கு உகந்ததல்ல என தெரியவந்திருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை பணிப்பாளர் டாக்டர் சண்முகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பரிசோதனைகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. நூற்றுக்குத் தொண்ணூற்று எட்டுசதவீதமான நீர் மக்கள் அருந்துவதற்குத் தகுதியற்றது.

இந்நீரினைப் பருகுவதால் பல் வேறுபட்ட வியாதிகள் மக்களுக்கு உடனடியாகப் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. மக்கள் இந்நீரைப் பயன்படுத்துவதாயின் அதற்கான மாற்று நட[illegible]கைகளை மேற்கொண்டு அது[illegible]லும் கிடைக்கின்ற நீ[illegible]னபடுத்த வேண்டும். [illegible] இரண்டு [illegible] [illegible] மூலம் பல்வேறுபட்ட வி[illegible] போன்ற [illegible] யாழ[illegible] [illegible] நீர் தேக்[illegible] கழிவுகளும் நிலத்தடி நீ[illegible] கலந்துவிடுவதே இதற்குக் [illegible] மாதம் எனவும் அவ[illegible] தெரிவித்தார். (23)




# முல்லைத்தீவு-வற்றாப்பளை அ
# வருடாந்த பொங்கல் உற்சவ

நற்றிறத்தினைக் கொண்ட கண்ணகியே!
நாமும் உனை வணங்கி நிற்கின்றோம்

**தெய்வம் வாணிப மாளிகை**

புதுக்குடியிருப்பு சந்தி, (சி-7944) புதுக்குடியிருப்பு.

நந்திக் கடற்கரை கோயிலாய்
கொண்ட கண்ணகை அற்புதங் கொடியே!

அனைத்துவகை பலசரக்குப்
பொருட்களின் விற்பனையாளர்

**அன்னம் பல்பொருள் வாணிபம்.**

சிலாவத்தை சந்தி,
முல்லைத்தீவு. (சி-7945) உரிமை : செ. பஞ்சலிங்கம்.

கண்ணகியே! உமை வணங்குகிறோம்

* சீமெந்து கட்டடப்பொருள்கள்
பெயின்ற் வகைகள், கோழித் தீன் வகைகள்.

விற்பனையாளர்

**வன்னி கட்டடப்பொருள்**
**வேதியல் இடுபொருள் வாணிபம்**

முதன்மைச்சாலை, (சி-7946) தண்ணீரூற்று.

கண்ணகி அம்பாளே! எல்லோரையும் காத்திடம்மா!

* சகலவிதமான பிறேம் வகைகள்
* சோக்கேஸ் பிற்றிங்
* கணனி முறையில் படங்கள் பெரிதாக்கி லெமனேற்றிங் செய்து வழங்கப்படும்.

**ஒளிர்ச்செல்வம் படமாடம்**

முதன்மைச்சாலை, (சி-7947) முல்லைத்தீவு.

நாடி வருவோருக்கு தாயே உன் வரத்தை தந்திடம்மா

* சிற்றுண்டி வகைகள் மதிய உணவு வகைகளை
குளிரூட்டப்பட்ட ஒரே இடத்தில் சுவைத்து மகிழ

**இரத்தினம் சுவையகம்**

முதன்மைச்சாலை, (சி-7948) முல்லைத்தீவு.

இன்று நடைபெறும் பொங்கல் விழாவில்அன்னையின்
அருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

மிதிவண்டி உதிரிப்பாகங்கள் சகல விதமான
அன்பளிப்புப் பொருள்களை பெற்றிட

**மடு அன்னை பல்பொருள் வாணிபம்**

முதன்மைச்சாலை, (சி-7949) முல்லைத்தீவு.

நம்தேசமதில் அமைதிநிலவ அன்னையருள்
வேண்டி நிற்கின்றோம்.

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்
கட்டடப் பொருட்கள் பெயின்ற் வகைகள்
விற்பனையாளர்

**திருச்செல்வம் பல்பொருள் வாணிபம்**

முதன்மைச்சாலை, முல்லைத்தீவு. (சி-7954)

இன்றைய பொங்கல் விழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**லவன் பப்படம்**

முள்ளியவளை.

(சி-7942)

வற்றாப்பளைக் கிராமத்தின் கிழக்கே முல்லைத்தீவையும், வடக்கே முள்ளிவாய்க்காலையும், இடையே நந்திக்கடல் பிரித்து நிற்க, தெற்கே தண்ணீரூற்றும் முள்ளியவளையும், மேற்கு கேப்பாபிலவும் சூழ்ந்திருக்க நால்வகை நிலத்துக்கும் உரிய அம்சங்களை நினைவூட்டும் வகையில் அருள் ஒளி வீசி அமைந்துள்ளது கண்ணகி அம்மன் ஆலயம்.

வற்றாப்பளையில் மாடு மேய்க்கும் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் கலப்பைக்கு வெட்டிக்காய்ந்த வேப்பம் பட வாளில் வந்தமர்ந்த மூதாட்டி ஒருவர் சிறுவர்களை அழைத்து எனக்குக் களைப்பாக இருக்கிறது. பசிக்கிறது. நீங்கள் சமைத்து விளையாடக் கொண்டு வந்த அரிசி பாத்திரங்களினைப் பயன்படுத்திப் பால் கறந்து வந்து பொங்கி எனக்கும் தந்து நீங்களும் சாப்பிடுங்கள் என்றார். சிறுவர்களும் பொங்கலை ஆச்சியுடன் பகிர்ந்து உண்டனர்.

மாலைப் பொழுதானதும் சிறுவர்களை அழைத்து நந்திக் கடல் தண்ணீர் கொண்டு வாருங்கள் என எடுப்பித்த மூதாட்டி அதில் திரிச்சீலையை வைத்தார். அப்போது சிறுவர்கள் ஏன் ஆச்சி திரிச்சீலை என்றதும், இரவுக்கு எனக்கு வெளிச்சம் வேண்டும். விளக்குத் தயார் பண்ணிவிட்டேன் என்றார். ஆச்சியின் செயலை ஆவலுடன் பார்த்த சிறுவர்களிடம் தலையை விரித்து பேன்



பார்க்குமாறு கூற, ஆச்சி பல கண்களுடன் இருக்கக் கண்டு ஆச்சரியடைந்தனர்.

உடனே ஆச்சி "பயப்படாதீர்கள், நான் உங்களைக் கண் போல் காத்தருளவந்த கண்ணகி. இத்தினத்தில் எனக்கு நந்திக்கடல் தீர்த்தத்தில் விளக்கேற்றிப் பொங்கல் படையல் செய்து வழிபடுங்கள்" என்றார்.

சிறுவர்கள் ஓடிச்செ
வர்களைக் கூட்டி வ
ஆச்சியைக் காண
ஆனால் நந்திக்கடல்
பேரொளிபர[illegible]க் செ
ஆச்சி குந்தியிருந்த பட்
கட்டை துளிர்த்திருப்ப
டனர். இது கடவுளின்
உணர்ந்த பெரியவர்க
விசாகத்தை மிக அ
வில் பொங்கல், படை
நந்திக்கடல் தீர்த்தத்
கேற்றி ஆச்சியின்
கருணைக் கடலில்
என்பது வரலாறு.
பொங்கல் திங்கள் அ
தின் முன் வற்றாப்பள
ஆலயத்தை நோக்
பாதையால் மடைப்ப
டன் காட்டு விநாயகர்
ருந்து மாட்டு வண்டில்
வலமாக வருவர். அம்
மூலஸ்தானவாயிலில்
விளக்கை பேரொ
வைத்துவிட்டு அ
கும்பத்தில் இ[illegible]த்தி க
மடைபரவி [illegible]ங்கல்
தொடரும். சிலம்பு
மறுபுறம் தொடரும்.
10 மணியளவில் வ
இடம்பெற்று பொங்க
கும். உடுக்கு, சில
பத்திரி போன்ற

தமிழரின் அடிமை நிலை தகர்த்திட, அவர் புது உரிமை

உழவு இயந்திரம், மோட்டார் சைக்கிள்,லேடன் வாகனஉதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள

**அப்பன் உதிரிகள் வாணிபம்**

நெடுஞ்சாலை, (சி-7963) புதுக்குடியிருப்பு.

தரமான ஒலிப்பதிவுகளுக்கும்
பொக்ஸ் செற் வாடகை சேவைக்கும்

**கதிரொளி ஒலிப்பதிவுக் கலையகம்.**

முதன்மைச்சாலை, (சி-7964) முல்லைத்தீவு.

உ
க
நெ



எல்லையில்லாத வரமளிப்பாய்
பல தொல்லையில் இருந்து
எமைக்காப்பாய்
கண்ணகியே!

**திருக்குமரன் புடைவை மாளிகை**
**(ரெலிக்கோணர்)**

நெடுஞ்சாலை,
புதுக்குடியிருப்பு

முதன்மைச்சாலை,
முல்லைத்தீவு.

திருக்குமரன் மணப்பந்தல் சேவை.

7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(சி-7951)

இன்றைய பொங்கல் உற்சவ நா
இறையருள் பலகிப் பெருகட்டும்

நவீன வடிவமைப்புக்களுக்கேற்
தங்க நகைகளு[illegible]
எம்மிடம் வாருங்கள்.

**கதிர்நிலா ந**

தண்ணீரூற்று, மு

எம்மிடம் 1000/- க்கு மேற்பட்ட ந
செய்யும் எமது வாடிக்கையாளர்களு
வருடப்பிறப்பு அன்றும் அதிஷ்டம் ப
வழங்கப்படும்.வெள்ளி நகைத் தொழில
சகல நகைகளும் செய்து வழங்கப்ப
உரிமையாளர் :ஞா. புவனேசராச

இன்று பொங்கல் விழா நடைபெறும் கண்ணகியாள்
பேரருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

புதுப்பொலிவு பெற்றுள்ள முல்லைத்தீவு நகரில்
உங்கள் விருப்புக்கேற்ப அழகிய தங்க
நகைகளைப் பெற்றிட ஒரு முறை விஜயம் செய்து பாருங்களேன்!

**கலையரசி நகை மா**

முதன்மைச்சாலை, (சி-7950)

# அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய

# வ சிறப்பிதழ் -09-06-2003



ஓடிச்சென்று பெரிய
ட்டி வந்த போது
காணவில்லை.
திக்கடல் தீர்த்தம்
கொ டிருக்க
ந்த பட்ட பட வாள்
த்திருப்பதைக் கண்
வுவின் காட்சி என
ியவர்கள் வைகாசி
ிக அண்டிய திங்க
படையல் செய்து
தீர்த்தத்தில் விளக்
ச்சியின் பெருங்
கடலில் மூழ்கினர்
லாறு. வைகாசிப்
கள் அன்று உதயத்
ற்பளை அம்மன்
நோக்கி குறித்த
மடைப்பண்டங்களு
நாயகர் ஆலயத்திலி
வண்டில்களில் ஊர்
ர். அம்மன் ஆலய
ாயிலில் உவர்நீர்
பேரொளி பரப்ப
அம்மனைக்
த்தி கத்த நேர்ந்து
ங்கல் யைகள்
லம்பு கூறல்படிப்பு
டரும். இரவு சுமார்
ில் வளர்ந்து நேரல்
பொங்கல் ஆரம்பிக்
சிலம்பு, பிரம்பு
ன்ற அம்மனின்

சின்னங்களும் பூசையில் வைக்கப்படும். செவ்வாய் உதயத்திற்கு முன் பொங்கல் நிகழ்வுகள் யாவும் முற்றுப்பெறும்.

கடந்த பல ஆண்டுகளாக



எமது பகுதியில் ஏற்பட்ட யுத்தச் சூழலினாலும், முல்லைத்தீவு இராணுவ முகாம் மிக அண்மையில் அமைந்திருந்ததாலும் அயற்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். அத்தோடு இவ் ஆலயத்தின் மீது இந்திய இராணுவத்தினர் முதன்முறையாக எறிகணை வீசியதில் 02.11.1987 அன்று ஆலயத்தில்தஞ்சமடைந்திருந்த 8 பேர்வரை மரணமடைந்தனர். அதன் பின்பு பொங்கல் தினமான 18.05.1992 அன்று ஆலயத்தின் மீது இலங்கை இராணுவத்தினர் எறிகணைகளை வீசித் தாக்கினர். இதில் 23 அப்பாவிப் பொது மக்கள் மரணமாயினர். இது போன்றே தொடர்ச்சியாக 1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் அழிக்கப்படும் வரை ஆலயமும், சூழலும் பலத்த சேதத்திற்குள்ளாயின.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஓரளவு இயல்பு நிலையில், ஆலயத்தின் இராஜ கோபுர உடைவுகள் சீர் செய்தலுடன் பல புனருத்தாரண வேலைகளை செய்யபரிபாலனசபையினர் முடிவு செய்துள்ளனர். இம் முயற்சிகள் நல்லபடி நிறைவேறவும், நொந்து போயுள்ள எமது நாட்டு மக்கள் மேன்மையோடும் உரிமைகளோடும் வாழவும், நாட்டில் சாந்தியும் சமாதானமும், நிலவ அன்னையருள் வேண்டி, எமது முயற்சிகளில் நல்லெண்ணமும், நம்பிக்கையும் கொண்ட அன்பர்களின் ஆலோசனையும், ஆதரவும் எதிர்பார்க்கப்படுவதாக ஆலயபரிபாலன சபையினர் அறியத்தருகின்றனர்.

*இதமாக்கம் காரையூரான்*


நந்திக் கடற்கரையில் நாடியிருந்தே
தேடியருள் வேண்டி வரும்
அடியவர் துன்பங்களை அகற்றிடம்மா!

**இளவரசி (விமல்ஸ்)**
புடைவை மாளிகை

புதுக்குடியிருப்பு சந்தி, (சி-7962) புதுக்குடியிருப்பு.

கண்ணகியாள் அருள் எல்லோருக்கும் கிடைக்க
பிரார்த்திக்கின்றோம்.
* அனைத்து வகை றெடிமேட் ஆடைகள்
* அன்பளிப்புப் பொருட்கள்
வீட்டுத் தளபாடங்கள் விற்பனையாளர்

**அம்மன் வணிக மாளிகை**

நெடுஞ்சாலை, (சி-7961) புதுக்குடியிருப்பு.

எல்லோரையும் காத்தருள்வாய்
கண்ணகி அம்பாளே!
பலசரக்குப் பொருள்களின்
விற்பனையாளர்

**முருகன் களஞ்சியம்**

முதன்மைச்சாலை, (சி-7960) முள்ளியவளை.

...மை பெற்றிட அன்னையருள் வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் விருப்பத்திற்கேற்ப அன்பளிப்புப்
பொருட்களை பெற்றுக்கொள்ள

**கயல்விழி அழகுச் சோலை**

நெடுஞ்சாலை, (சி-7965) புதுக்குடியிருப்பு.

சகல விதமான பிறேம் வகைகள்
செய்து பெற்றிட நாடுங்கள்.

**அருட்பிள்ளையார்**
படமாடம் & அழகுமாடம்.
(ஐங்கரன்)

நெடுஞ்சாலை, (சி-7966) புதுக்குடியிருப்பு.

கண்ணகியே!
எங்களைக் காத்தருளுமம்மா!
பலசரக்குப் பொருட்களை நியாயமான
விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

**செந்தமிழ்க் குமரன்
பல்பொருள் வாணிபம்**

அங்காடி உட்புறம், (சி-7959) தண்ணீரூற்று.

...சவ நாளில் தேசமெங்கும்
...கட்டும்.
...க்கேற்ப



**நகைமாடம்**
முள்ளியவளை.

...ட்ட நகைகளை கொள்வனவு
...களுக்குத் ஒவ்வொரு சித்திரை
...ம் பார்க்கப்பட்டு பரிசுகள்
...தொழிலகங்களுக்கு மிசினரி மூலம்
...கப்படும்.
...ராசா(யோகன்) (சி-7939)

வற்றாப்பளை கண்ணகி அம்மனின் பாதங்களை
பணிந்து நிற்கின்றோம்.

திருமணப்பட்டுப்புடைவைகள்
சிறுவர், சிறுமியர்களுக்கானஅனைத்துவகை றெடிமேட்
ஆடைகள்,சல்வார், சோளிகிற் இறக்குமதி
செய்யப்பட்ட சேட் வகைகள், அன்பளிப்பு பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்.

**கோசலா புடைவை மாளிகை**

(நாகரிக புடைவை உலகின் முன்னோடிகள்) (சி-7952)

தண்ணீரூற்று. முள்ளியவளை.

நந்திக்கடல் ஓர நாயகியே!
உன் வரம் வேண்டுகின்றோம்.
* சிற்றுண்டி வகைகள்
* மதிய உணவு வகைகள்
* குளிரூட்டப்பட்ட சோடா வகைகள்
என்பனவற்றை ஒரே இடத்தில் சுவைத்து மகிழ

**பூங்குன்றன் உணவகம்**

தண்ணீரூற்று. (சி-7940) முள்ளியவளை.

வற்றாப்பளையில் எழுந்தருளியிருக்கும்
தாயே! எல்லோரையும் காத்திடம்மா!

அழகிய தங்க நகைகளை
குறித்த தவணையில் செய்து பெற்றிட

**திருமாயவன் நகைமாடம்**

தண்ணீரூற்று, (சி-7958) முள்ளியவளை



...டம்
முல்லைத்தீவு.

இன்றைய பொங்கல் விழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

*கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
விழாக்களுக்கான படப்பிடிப்புக்கும்.*

**கவி புகைப்படக் கலையகம்**

முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.

*இன்றைய பொங்கல் உற்சவத்தில்
அன்னையருள் பிரகாசிக்கட்டும்.*

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

முல்லை கிழக்கு
பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
முல்லைத்தீவு.

நந்திக்கடல் ஓரத்திலே அமைந்திருக்கும் கண்ணகியே
எமது நாட்டில் சமாதானம் நிலைத்திருக்க வேண்டுகிறோம்.

**முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
முல்லைத்தீவு.**

தலைவர், அங்கத்துவ சங்கங்கள்,
பணிப்பாளர், பணியாளர்கள்.
(சி-7953)

வற்றாப்பளையில் வரமளிக்கும் நாயகியே!
உமைப் போற்றி வணங்குகின்றோம்.
* சிற்றுண்டி வகைகள்.
* சைவ, அசைவ உணவு வகைகளுக்கு

**புதிய அம்பாள் உணவகம்**

முதன்மைச்சாலை, (சி-7941) முல்லைத்தீவு.

வற்றாப்பளை நாயகியை
இருகரம் கூப்பித் தொழுகின்றோம்.
தரமான ஒலிப்பதிவுகளுக்கும்.
திரைப்பட பிரதிகள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ளவும்.

**விநாயகர் ஒலிக்கலையகம்**
(ராஜன் வீடியோ சென்ரர்)

முதன்மைச்சாலை, (சி-7957) முல்லைத்தீவு.

## திருகோணமலை மாவட்டத்தின்


# பாரம்பரிய தமிழர் பிரதேசத்தில் புத்த விகாரை அமைக்கும் பணி ஆரம்பம்!

### - சிங்களவர்களும் புதிதாக குடியமர்வு

**திருகோணமலை மாவட்டத்தில் அனுராதபுர வீதியில் அமைந்துள்ள விளாங்குளம் என்ற பாரம்பரிய தமிழ் கிராமத்தில் புத்த விகாரை அமைக்கும் பணி மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 90ஆம் ஆண்டு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட போது இத்தமிழ் பிரதேச மக்கள் புகலிடம் தேடி ஓடினர். இவ்விடத்திலேயே இராணுவத்தினரின் ஆதரவுடன் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விகாரை அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபின் இந்நடவடிக்கை தடுக்கப்பட்டது. அப்பிரதேச தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து விகாரையமைக்கும் பணி நிறுத்தப்பட்டது எவ்வாறெனினும் மிகுந்த ஆத்திரமூட்டும் வகையில் மீண்டும் விகாரை அமைக்கும் வேலைகள் ஆரம்பித்துள்ளன. விகாரைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் புத்தர் சிலை ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதனிடையில் திருகோணமலை மாவட்ட ஆண்டான் குளத்திலும் தமிழர் பிரதேசத்தில் பிக்கு ஒருவரின் மேற்பார்வையில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.



மற்றும் ஒரு "அபிவிருத்தியாக" யாழ். கொழும்புத்துறைப் பகுதியில் சுவாமியார் வீதியிலும் புதிய விகாரை ஒன்று அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியிலும் இராணுவத்தினர் இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

# இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தி பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடியும்

### அரச, அரசசார்பற்ற, தொழிற்சங்க அமைப்புக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதன் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க முடியும் என அரச, அரசசார்பற்ற மற்றும் தொழிற்சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதனூடாக சமாதான முயற்சிகள் கனவாகிப்போய்விடுமோ? என்ற மக்களின் சந்தேகத்தையும் போக்க முடியும்.

சிறிலங்கா அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினால் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளுக்கு முழுமையான பங்களிப்பை செய்யக் காத்திருக்கின்றனர் எனவும் அவ்வமைப்புக்கள் கூறியுள்ளன.

வடக்கு- கிழக்கு அமைப்புக்களுடன் தென்னிலங்கை அமைப்புக்களும் ஒன்று சேர்ந்தே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளன.

## - மன்னார் மாவட்டத்தில் -

# படையினர் தங்கியுள்ள இடங்களின் விபரம் திரட்டல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் தங்கியுள்ள அரச கட்டடங்கள், பொது மக்களின் வீடுகள் குறித்த விபரங்கள் முழுமையாகத் திரட்டப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த விபரங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் ஆதரவுடன் கடந்த வாரம் திரட்டப்பட்டுள்ளது.

இந்த விபரங்களைத் திரட்டும் குழுவில் விடுதலைப்புலிகளின் மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர், இராணுவத் தரப்பில் கேணல் ஜெயக்கொடி, மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேமசிறி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி மரியநாயகம் குருஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எட்வேட் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை இக்குழுவில் இடம் பெறுவதை சிறிலங்கா கடற் படையினர் தவிர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மணல் கிரவல் அனுமதியின்றி ஏற்றுவோர் மீது நடவடிக்கை

புதுக்குடியிருப்பு பகுதியில் அனுமதியின்றி மணல் மற்றும் கிரவல் ஏற்றுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள தண்ணியடியும் அதனை அண்டிய பகுதி களிலும் மணல், கிரவல் ஏற்றுவதாகத் தெரியவந்துள்ளதுடன் இவ்வாறு அனுமதியின்றி ஏற்றுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மண், கிரவல் ஏற்றவுள்ளோர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலகத்தில் அனுமதி பெற்று உரிய இடத்தில் மணல், கிரவல் ஏற்றுமாறு புதுக்குடியிருப்பு காவல்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர். இதை மீறி ஏற்றுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (26)


## 11ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 24 □ 11 □ 1970



தாயக மண்ணில் 09 □ 06 □ 1992

08-06-1992 அன்று மணலாறு அலம்பில் பகுதியில் இருந்து குமுழமுனை நோக்கி முன்னேறிய இராணுவத்தை தங்கபுரம் பகுதியில் வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலில் விழுப்புண்பட்டு யாழ். மருத்துவமனையில் வீரச்சாவடைந்த-

**லெப். வேந்தன்/கில்மன்**

**சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி**
**(வேலாயுதபிள்ளை வரதன்/யாழ்ப்பாணம்)**
**[பளை மகாவித்தியாலய உயர்தர வகுப்பு பழைய மாணவன்]**

*அன்னை அணைப்பை அறுத்தெறிந்து*
*தந்தை சொல்லை தட்டிக் கழித்து*
*உடன் பிறப்பை உடன் மறந்து*
*தாய்மண் விடிவுக்காய் வீழ்ந்த – இம்*
*மாவீரனின் கனவு நனவாகும் காலம் இது.*

என்றும் உன்நினைவுடன்
**குடும்பத்தினர்,**
**உறவினர்கள்.**

(3310)



கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்

## பதவி வெற்றிடம் (வெளிவாரி)

**பதவி:** காவலாளி
சம்பளக்குறியீட்டு இலக்கம் 315/17
சம்பள அளவுத்திட்டம் - 31/99 சுற்றுநிருபத்தின்படி
3000 - 4150
55x10 60x10

**வயதெல்லை:** 21-45

**தகைமைகள்:** 05ஆம் வகுப்பு கல்வித்தராதரப்பத்திரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

ஒன்றியத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே பூர்த்தி செய்து அனுப்பல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினையும், ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்வதற்காக தங்களது பெயர், முகவரி எழுதப்பட்ட 9" தர 4" அளவிலான முத்திரைக்கடித உறை ஒன்றை 16-06-2003க்கு முன்னர் கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம், கனகபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 23-06-2003**

தலைவர்,
கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(சி-8149)



## "வவுனியா வடக்கு புதூர் நாகதம்பிரான் தேவஸ்தானம்"





# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் மகா கும்பாபிஷேக ஆரம்பம் 05-06-2003 தொடங்கி எண்ணைக்காப்பு 10-06-2003 தொடங்கி 11ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 8.00 மணிக்கு புண்ணிய வாசனம், யாகபூசை, விஷேச ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை வேத தோத்திர திராவிட தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், தூபி அபிஷேகம், பிரதான கும்பங்கள் வீதி, பிரதக்ஷனம், நாகதம்பிரான், பிள்ளையார் நாகபூசணி அம்மன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு மகா கும்ப அபிஷேகம், தசதர்சனம் எஜமானபிஷேகம், மகா அபிஷேகம், மஹாகவிர், நிவேதனம், விஷேச பூசை ஆச்சார்ய, சம்பாவனை, ஆசீர்வாதம், அடியார்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்படும். மூலஸ்தான பூசை, வசந்தமண்டப பூசை, சுவாமி வீதி உலா.

பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார்
சிவாகம கிரியா திலகம், சிவாகம கிரியா பூசணம்,
பிரதிஸ்டாதிலகம், சிவாகம, கிரியாபானு, கிரியாகலாப மணி,
சிவஸ்ரீ. ராஜாராம் குருக்கள் அவர்களால்
நடத்தப்படும்.

அன்றையதினம் போக்குவரத்து ஒழுங்குகள்
ஆலயத்துக்கு செல்வதற்கு ஒழுங்குகள்
செய்யப்பட்டுள்ளன.

இ. பூலோகசிங்கம்,
செயலாளர்,
புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய,
பரிபாலனசபை புதூர்.

(சி-8146)

# பசுமைச் சூழலைப் பாதுகாப்போம்

சபா.நகுலேஸ்வரன்
உதவி விரிவுரையாளர்,
விவசாய இரசாயனவியற்றுறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

இயற்கையின் இன்றியமையாத பெருங் கொடையாகிய சூழலைப் பாதுகாப்பது என்பது இப்பூமியிலே பிறந்த எந்தவொரு உயிரினதும் தலையாய கடமையாகும். ஏனைய எந்த ஜீவராசியைத் தவிர்த்தாலும் ஆறறிவு படைத்த மனிதன், தான் வாழும் சூழலைப் பாதுகாத்து அதனால் தன்னையும் பாதுகாத்தல் என்பதே இந்தச் சூழல் பாதுகாப்பு வாரத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இன்று அதீத வளர்ச்சியில் முன்னேறும் விஞ்ஞான யுகத்திலே சூழல் மாசடைதல் என்பது மனிதனிற்குச் சவாலாக அதேவேளை அம்மனிதனாலேயே ஏற்படுத்தப் பட்டுள்ள பாரியதொரு பிரச்சினை என்றால் மிகையாகாது. தனக்கான தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க பல வழிகளைச் சிந்தித்துப் புதிய பல கண்டு பிடிப்புக்களைச் செய்த மனிதன் இன்று அதே பல கண்டு பிடிப்புக்களால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேண்டத்தகாத பின்விளைவுகளைச் சந்தித்துக் கொள்கின்றான். பல வழிகளிலும் நேரத்தைச் சுருக்கி தேவைகளை இலகுவாகவும், விரைவாகவும் செய்ய விழைந்த மனிதன், இன்று நேரத்தைச் செலவழித்துச் சிந்திக்க வேண்டிய நிலையிலுள்ளான். அவ்வகையில் இன்று உலகெங்கும் பேசப்படும் சூழல் மாசுறல் பிரச்சினைக்குத் துரிதகதியில் தீர்வு காணவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எமது தேசத்தைப் பொறுத்தவரையில் பசுமை என்ற வார்த்தைக்குப் பஞ்சமில்லை. அதேவேளை சிலவகைப் பாவனைப் பொருட்களால் நாம் எமது பசுமையைத் தொலைத்து விடுவோமோ என்ற அச்சமும் ஏற்பட வாய்ப்புள்ளது. உண்மை தான்! எந்தெந்தத் தேவைகளிற்கு என்றில்லாது, எதற்கெல்லாமோ என உற்பத்தி செய்யப்பட்டு பொலித்தீன், பொலிபுரோப்பைலின், பொலிவைனைல் குளோரைட் மற்றும் பிளாஸ்ரிக் முதலியனவற்றால் செய்யப்பட்ட பாவனைப் பொருட்களாலேயே எமது சூழல் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. இவை பலவகையான சேதனப்பல்பகுதியச் சேர்வைகளால் உருவாக்கப்பட்டு பலவர்ணங்களுடன், பலவடிவங்களுடன், பலஅளவுகளில், பலவகைகளில் எமது கைகளில் கிடைக்கின்றன.

எமது தேசத்தில் இன்று வாழுகின்ற எந்தவொரு குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்களுடன் இவ்வகைப் பொருட்கள் பின்னிப்பிணைந்துள்ளமை தவிர்க்கமுடியாத ஒன்றாகியுள்ளதை அவதானிக்கலாம். காலையில் தேநீர் அருந்தப் பாவிக்கும் பிளாஸ்ரிக் குவளை, தண்ணீர் எடுக்கப்பயன்படும் வாளி, சமயலறையில் பாவிக்கப்படும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள், பொருட்களை எடுத்துச் செல்லப் பயன்படும் பொலித்தீன் பைகள், ஏன் இரவு படுக்கப் பயன்படுத்தும் பாய் கூடப் பிளாஸ்ரிக், இருக்கப்பயன்படும் கதிரையும் பிளாஸ்ரிக், இப்படியே எத்தனையோ பொருட்களை எத்தனையோ தேவைகளுக்காகப் பயன் படுத்துகின்றோம். பொருளாதார ரீதியில் ஒரு வகையில் இவ்வகைப் பொருட்கள் இலகுவாகவும் அதேவேளை மலிவாகவும் கிடைக்கின்றமை, எமக்கான ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனைவிட வெள்ளத்தால் அழிவுகள் வந்தாலும் சரி, நாட்டுப் பிரச்சினைகளால் இடப்பெயர்வு ஏற்பட்டாலும் சரி உடனடியாக வெளிநாட்டு நிறுவனங்கள் கொடுத்துதவும் நிவாரணப் பொருட்களில் பிளாஸ்ரிக் வாளி, பிளாஸ்ரிக் பை, பொலிபுரொப்பைலின் கூரை விரிப்பு, பிளாஸ்ரிக் பாத்திரங்கள் என்ற வகையறாக்கள் சேர்க்கப்படாது விடின் அது அருமையிலும் அருமையான விடயமாகும்.

இதைவிட இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ஓர் அமைதியான சூழ்நிலையில் தெற்கிலிருந்து வடக்கிற்கு வரும் வியாபாரப் பொருட்களிலும் சரி உல்லாசப் பயணிகள் எடுத்து வரும் பொருட்களிலும் சரி, இவ்வகைப் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் என்பவற்றாலான பொருட்கள் அதிகம் அடங்குகின்றன. உதாரணமாகக் குளிர்பானப் போத்தல்கள், சிற்றுண்டிப் பைகள், ஐஸ்கிறீம் குவளைகள், விளையாட்டுப் பொருட்கள், வேடிக்கை விநோதப் பொருட்கள் முதலியன அடங்குகின்றன. சரி, இந்தமாதிரிப் பொருட்களை ஏன் பாவிக்கக் கூடாது என்கின்ற வினா உங்களில் பலரது மனதிலும் எழலாம். இந்த வினாவிற்கான விடைபற்றி இனி ஆராய்வோம்.

பொதுவாக நாம் எமது பயன்பாட்டிற்கு உதவாத எந்தப் பொருட்களையும் நிலத்தில் புதைத்தோ அல்லது நெருப்பில் போட்டு எரித்தோ அழிக்க முயல்கின்றோம். இப்படியாகப் புதைக்கப்படும் பொருட்களின் பெரும் பகுதியை மண்ணில் வாழும் பலவகை நுண்ணங்கிகள் தமது பிரிகையடைதலாக்கல் செயன்முறை மூலம் அழித்து விடுகின்றன. அதேவேளை எரிக்கப்படும் பொருட்களிலும் பெரும் பாலானவை சாம்பலையே மீதமாகக் கொடுக்கின்றன. ஆனால் இந்தப் பொலித்தீன், பொலபுரோப்பைலின், பொலிவைனைல் குளோரைட் மற்றும் பிளாஸ்ரிக் முதலியவற்றால் ஆன பொருட்களை மண்ணில் புதைக்கும் போது, மண் நுண்ணங்கிகள் தமது செயற்பாட்டால் அவற்றைப் பிரிகையடையச் செய்து அழிக்கும் ஆற்றலற்றனவாக உள்ளன.



அதேவேளை, இவ்வகையான பொருட்களை நெருப்பிலிட்டு எரிக்க விழையும் போது, இவ்வகையான சேதனப் பல்பகுதியச் சேர்வைகள் ஒருவித கரிய நிறப்புகையுடன் எரிந்து இறுதியில், சாம்பலிற்குப் பதில் குறைத கனத்துக்குட்பட்ட கரிய நிறப் பெறுதிகளையே கொடுக்கின்றன. இக்கரிய பெறுதிகளையும் கூட மண் நுண்ணங்கிகள் பிரிந்தழியச் செய்யும் ஆற்றல் அற்றன. எனவே, மண்ணில் புதைக்கப்பட்ட இவ் வகைப் பொருட்களால் எமக்குப் பயன்தரும் மண் நுண் ணங்கிகளின் செயற்பாடுகள் பாதிப்படை வதுடன், இவை மண்ணிலுள்ள பல்வேறுபட்ட பொருட்களுடன் ஏற்படுத்தும் இரசாயனத் தாக்க விளைவுகளினால் பல நச்சுப் பெறுதிகளையும் சூழலுக்கு விடுவிக் கின்றன. அதேபோன்று இவ்வகைப் பொருட் களை எரியூட்டலுக்கு உட்படுத்தும் போது நிகழும் குறைதகனம் காரணமாக வேண்டத்தகாத வாயுக்கள் பல சூழலுக்கு விடப்படுகின்றன. இந்நச்சு மற்றும் வேண்டத்தகாத வாயுக்கள் மனிதன் உட்பட சகல விலங்குகளிற்கும் ஏன் தாவரங்களுக்கும் கூட பாதிப்பை ஏற்படுத்து கின்றன.மொத்தத்தில் நாம் இவ்வகைச் சேதனப் பல்பகுதிப் பொருட்களை புதைத் தாலும்சரி, எரித்தாலும் சரி கழிவுப் பொருட்களிலிருந்து ஒரு தற்காலிக விடுதலையினைப் பெறும் அதேவேளை சூழல் மாசுபடலுக்கு ஓர் தூண்டுகோலாக அமைகின்றோம் என்பதைச் சிந்திக்கத் தவறுகின்றோம்.

இந்த வகையான சேதனப் பல் பகுதியங்களைப் பற்றி ஆய்வுகள் நடத்திய விஞ்ஞானிகளின் தகவல்களின் படி இவ்வகைச் சேதனச் சேர்வைகளை எந்த நுண்ணங்கியாலும் எக்காலத்திலும் பிரிகையடைச் செய்யமுடியாதிருக்குமாம்! என்ற தகவல் எம்மையெல்லாம் மேலும் சிந்திக்க வேண்டிய தேவைக்கு இட்டுச் சென்றுள்ளது.

அடுத்து இப்படியாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்குடன் பின்னிப் போயுள்ள எங்கள் வாழ்விலிருந்தும் சூழலை மாசுபடுத்தி எம்மையே அசுத்தப்படுத்தும் பிரச்சினையிலிருந்தும் எம்மை விடுவித்துக்கொள்ள என்ன வழிகள் என ஆராய்வோம். பொதுவாக இரண்டு வழிகள் மூலம் தான் இதற்கான தீர்வுகளைக் காணமுடியும். ஒன்று இந்தப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைப் படிப்படியாகக் குறைத்து அதற்கு மாற்றீடாக சூழலை மாசுபடுத்தாத மூலப்பொருட்களாலான பாவனைப் பொருட்களைப் பயன்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், இரண்டாவது வழியாகப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களைப் பயன்பாட்டில் எடுத்துக் கொள்ளாது எமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். இதில் இரண்டாவதாகக் கூறப்பட்ட விடயத்தை எம்மில் பலரால் இலகுவாக நடைமுறைப் படுத்த முடியாது. ஆகவே முதலாவது வழிமுறை ஊடாக முதலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் முதலியவற்றால் ஆன மூலப்பொருட்களையோ அல்லது முடிவுப் பொருட்களையோ எமது பிரதேசத்துக்கு எடுத்துவரப்படுவதைத் தடைசெய்வதன் மூலம் அவற்றின் பயன்பாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக தவிர்க்க வேண்டும். அதேவேளை, இவற்றின் பயன்பாட்டிற்கு நேரொத்த பயன்பாட்டைச் செய்யவல்லதும், மண் நுண்ணங்கிகளினால் இலகுவில் பிரிந்தழிதலிற்கு உட்படக் கூடியதுமான பல்பகுதியச் சேர்வைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட மாற்றீட்டுப் பொருட்களைப் பயன்பாட்டில் எடுத்துக் கொள்ளலாம்.

அந்தவகையில் எமது முன்னோர்களிற்கு நன்றி கூறிக் கொண்டு மீண்டும் அவர்கள் வழிக்கே செல்லவேண்டிய தேவையிலுள்ளோம். சும்மா தொட்டதுக்கெல்லாம் பொலித்தீன் பைகளைப் பாவியாது பிரம்பு, பனை ஓலை மற்றும் ஈர்க்கு என்பவற்றாலான பைகள், கூடைகளைப் பாவிக்கலாம். இன்னும் சமயற் பாத்திரங்களில் அலுமினியம் மற்றும் துருப் பிடிக்காத தகரத்தாலான பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். இவற்றோடு சேர்த்துப் பனையோலைப் பெட்டிகள், பனைநார் கடகப் பெட்டிகள் எனச் சொல்லிக்கொண்டே போகலாம். படுப்பதற்கு பிளாஸ்ரிக் பாய்தான் வேண்டுமா? பனையோலைப் பாயில் அல்லது கம்புப்புற்பாயில் படுத்துப்பாருங்கள் அதன் சுகமே அலாதியானது. எந்தவகைப் பிளாஸ்ரிக்கோ அல்லது பொலித்தீன் பொருட்களையோ எடுங்கள். எங்கள் கைவசம் அவற்றுக்கான மாற்றுப்பொருட்கள் இருக்கத்தான் செய்யும்.

அன்றைய காலத்தில் வழக்கத்திலிருந்த ஒரு முறை, முக்கியமாகத் தமிழர்கள் மத்தியிலிருந்த முறை, திருமணம் மற்றும் இன்னோரன்ன சடங்குமுறைகளிற்கு வரும் விருந்தினர்களுக்கு விருந்தளிக்க வாழைத்தண்டுத் தடல்கள் மற்றும் வாழையிலைகள் பயன் படுத்துவதாகும். இன்று எங்கு இப்படி நடக்கின்றது? வன்னி மண்ணில் எங்காவது நடந்தால் சரி. எத்தனையோ இன்றைய இளசுகளிற்கு வாழைத்தடலிற் சாப்பிடுவது எப்படி இருக்கும் எனத் தெரியாது.இதை அறிய விரும்பின் நயினை நாகபூசணி அம்மன் கோவில் சென்று வாருங்கள் தெரியவரும் இதன் மகிமை. இன்று எதற்கெடுத்தாலும் பொலித்தீன் சாப்பாட்டுத் தாளின் (**Lunch sheet**) பாவனைதான் அதிகமாயுள்ளது.



முக்கியமாக நாட்டிலுள்ள பெரும்பான்மையான உணவகங்களில் இந்தப் பொலித்தீன் சாப்பாட்டுத் தாளின் பாவனை அதிகமாயுள்ளது. ஒருமுறை பாவிக்கப்பட்ட பொலித்தீன் சாப்பாட்டுத் தாள் எறியப்பட்டாலும், அது பாவிக்கப்பட்ட சாப்பாட்டுக் கோப்பை எறியப்படுவதில்லையே? அதாவது பாவிக்கப்பட்ட சாப்பாட்டுத்தாளில் ஏதாவது கிழிவுகள் இருப்பின் அதனுடன் உபயோகப்படுத்தப்பட்ட சாப்பாட்டுக் கோப்பை நன்றாக சுத்தப் படுத்தப்படாது அடுத்தவருக்குப் பரிமாற எடுக்கப்படும் போது அங்கே நோய் தொற்று ஏற்பட சந்தர்ப்பம் ஏற்படுகின்றதல்லவா? ஆகவே, இந்த வகையில் நாம் கற்பகதருப் பொருட்களை பாவனைக்கு எடுத்தாலும் சரி வாழையிலை,வாழைத்தடல்களைப் பாவனைக்கு எடுத்தாலும் சரி. அவற்றின் கழிவுகளைக் கால்நடைகளிற்குத் தீவனமாகப் போடலாம். அதைவிட மண்ணில் புதைத்தால் மண் நுண்ணங்கிகளால் இலகுவாகப் பிரிந்தழித்தலிற்கு உட்பட்டு மண்ணிற்கு வளத்தையும் சேர்க்கின்றன. அதைவிட எரியூட்டலுக்கு உட்படுத்தும் போதும் கூடப் பூரணதகனம் நடைபெற்று சாம்பலாகி மண்ணிற்குப் பசளையாகின்றன. வளர்ச்சியடைந்த அல்லது விடயம் புரிந்த பல நாடுகள் இந்த வகையான பொலித்தீன், மற்றும் பிளாஸ்ரிக் என்பவற்றால் ஏற்படும் சூழல் மாசுறல் பிரச்சினைக்குத் தீர்வு காணும வகையில் உயிர்ப்பல் பகுதியங்கள் என்ற வகைக்குள் அடங்கும் காபோவைதரேற்றுக்கள் புரதங்கள் இலிப்பிட்டுக்களைக் கொண்டு தமக்கான பாவனைப் பொருட்களைத் தயாரித்துக் கொள்ள விழைகின்றன. உதாரணமாகக் காபோவைதரேற்றுக்கள் எமக்கு இலகுவாகவும், மலிவாகவும் அதேவேளை இலகுவில் மண் நுண்ணங்கிகளால் பிரிகையுறலுக்கு உட்படக் கூடியதுமான மூலப்பொருட்களாகும். இவ் வகையினுள் அடங்கும் செலுலோசு மற்றும் மாப்பொருளைக் கொண்டு பலவகையான பாவனைப் பொருளைத் தயாரிக்க முடியும். அந்த வகையில் தாய்லாந்து தேசத்தில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறப்பட்ட மாப்பொருளைக் கொண்டு பல பாவனைப் பொருட்களைச் செய்துள்ளனர். திரவ உணவுகளைக் கூட பாதுகாத்துக் கொள்ளவும் பரிமாறிக்கொள்ளவும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர் என்றால் பாருங்கள். இலங்கையில் கூட அண்மையில்ஓர் பல்கலைக்கழக மாணவனால் இத்தகையதொரு உயிர்ப்பல்பகுதியத்தை மூலப் பொருளாகக் கொண்டு பொருட்களைப் பொதி செய்யக் கூடிய தாளை உருவாக்க முடிந்துள்ளதையிட்டு நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தளவிற்கு எம்மால் மரவள்ளிக் கிழங்கு மாப்பையை உருவாக்க முடியாதுள்ளதையிட்டு வருத்தப்படாது, எம்மோடு இணைந்துள்ள எமது இயற்கையை வைத்துக் கொண்டு எம்மை வளப்படுத்திக் கொள்வோம். பொருளாதாரக் கண்கொண்டு பார்க்கும் இடத்து நாம் கற்பகதருப் பொருட்களையோ, அன்றேல் வாழை உற்பத்திப் பொருட்களையோ பாவிக்க விழையும் இடத்து அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வருமானம் பெற்றுக் கொடுப்போர்களாகவும், அதேவேளை எம்மையும், எமது சூழலையும் வளப்படுத்திப் பாதுகாத்துக் கொள்வோர்களாகவும் இருப்போம்.

இவ்வாறு பரந்துபடச் சிந்திக்கும் ஆற்றலை இழந்து குறுக்கு வழிகளைக் கையாண்டு சுலபமாகத் தேவைகளை முடிக்கப் பழகிக் கொண்ட நாம் எம்மையே ஏமாற்றிக் கொள்கின்றோம். பிளாஸ்ரிக் பொருட்களை நிலத்தில் புதைத்து அல்லது எரித்து எங்களைத் தற்காலிகமாக அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள முனைகின்ற நாம் நிரந்தர சூழல் பிரச்சினைக்கு அடிகோலு கின்றோம் என்பதையிட்டு ஒவ்வொருவரும் சிந்தித்தல் வேண்டும். எத்தனையோ கண்டு பிடிப்புக்களையும், எத்தனையோ வெற்றிகளையும் பெற்ற எமக்கு இது பற்றிச் சிந்திக்க எவ்வளவு நேரம் வேண்டும்? முயன்றால் முடி யாதது எதுவுமில்லை. முயல்வோம், முடிப் போம். இயன்ற வரை முயன்று சூழலைப் பாதுகாத்துச் சுகமாக வாழ்வோம்.

*******

# உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## "ஆஅவ" கடன் இல. 1846-SRI(SF)

# கேள்வி அறிவித்தல் – 18

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

### அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப்பணம் [ரூபா] |
|---|---|---|---|---|
| 01. | KN/NECORD/IR/01 | கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக்குளம் புனரமைப்பு- தொகுதி 1- குளக்கட்டுவேலை | M5 | 129,000/= |
| | | கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக்குளம் புனரமைப்பு - தொகுதி 2 வாய்க்கால் அமைப்பு | M7 | 35,000/= |
| | | கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்புக்குளம் புனரமைப்பு - தொகுதி 3 வாய்க்கால் அமைப்பு | M7 | 25,000/= |
| 02. | MU/NECORD/IR/01 | முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 1 குளக்கட்டுவேலை | M5 | 196,000/= |
| | | முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 2 வாய்க்கால் அமைப்பு | M6 | 62,000/= |
| | | முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 3 வாய்க்கால் அமைப்பு | M7 | 20,000/= |
| 03. | AM/NECORD/IR/01 | அம்பாறை மாவட்ட சடயந்தலாவை நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு - தொகுதி 1 | M7 | 30,000/= |
| | | அம்பாறை மாவட்ட சடயந்தலாவை நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு - தொகுதி 2 | M6 | 58,000/= |
| | | அம்பாறை மாவட்ட சடயந்தலாவை நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு - தொகுதி 3 | M7 | 43,000/= |
| | | அம்பாறை மாவட்ட சடயந்தலாவை நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு - தொகுதி 4 | M7 | 31,000/= |
| 04. | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 1 குளக்கட்டுவேலை | M5 | 140,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 2 வாய்க்கால் அமைப்பு | M7 | 46,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 3 வாய்க்கால் அமைப்பு | M7 | 34,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 4 வாய்க்கால் அமைப்பு | M7 | 33,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - தொகுதி 5 வாய்க்கால் அமைப்பு | M7 | 30,000/= |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

i. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("ICTAD"உடன் மேற்படி M7க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

iii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்த வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுபத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

iv. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v. மோசடியான. அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமையும். ஒரு ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டப் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்தில் பெறலாம். தொலைபேசி: 026-27434-5, பக்ஸ்: 026-27401, ஈமெயில்: **necord@sltnet.lk.**

06. கேள்வித் தொகுதிகளை 11-06-2003 இலிருந்து 25-06-2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத ரூபா 1000/= செலுத்திப் பெறலாம்.

07. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு முத்திரையிடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலைக்கு 30-06-2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. முன்கூட்டியே கேள்விகோருவோர் கூட்டமொன்று 23-06-2003 அன்று மாலை 2.00 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும்.

10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த. லங்காநேசன்,**
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்ட கேள்விச் சபைத் தலைவர்,
140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

(சி-7898)

## சிந்தனைக்கு



மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 09-06-2003

## 'சில்லறைப்' பிரச்சினை

வன்னிப் பெரு நிலப்பரப்பில் சில்லறைக்காசு–நாணயம்–பெரும் தட்டுப்பாட்டிற்குரியதொன்றாகிவிட்டது. சிறிலங்கா அரசு சில்லறை நாணயங்களை அச்சிடுவதை நிறுத்திவிட்டதோ அன்றிப் புழக்கத்தில் இருந்து ஒழித்துவிட்டதோ என ஐயப்படும் அளவிற்கு வன்னிப் பகுதியில் இத்தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தோடு, இத்தட்டுப்பாடு ஒரு வாரமோ அன்றி இரு வாரமோ அல்ல, சுமார் ஒருவருடம் வரையில் நீடித்து நிலவுகின்றது.

சிறிலங்கா அரசு சில்லறை நாணயங்களை புழக்கத்தில் வைத்துள்ளது என்பதற்கும், அவை புழக்கத்தில் உள்ளன என்பதற்கும் தென்னிலங்கையில் அவற்றின் பயன்பாடு பரவலாக உள்ளதில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக பொதுப் போக்குவரத்து, தொலைபேசி என்பனவற்றிற்கு சில்லறை நாணயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் வியாபார நிலையங்கள், தேநீர்ச்சாலைகள் என்பனவற்றிலும் சில்லறை நாணயங்கள் கொடுக்கல், வாங்கல் செய்யப்படுகின்றன.

ஆனால், வன்னிப் பகுதியில் சில்லறை நாணயங்கள் வழக்கொழிந்து வரும் நிலை உருவாக்கி அவற்றிற்காக பொருட்கள் வழங்கும் நடைமுறையொன்று வளர்ச்சிகண்டு வருகின்றது. குறிப்பாக, ஒருவர் உணவகம் ஒன்றில் தேநீர் அருந்திவிட்டு பத்து ரூபாவைக் கொடுப்பாரேயானால் நான்கு ரூபாவிற்கு டொபிகள்– இனிப்புக்கள்– வழங்கப்படுகின்றன. டொபிகள் வேண்டுமா? என்ற கேள்விகூட இல்லாது அவை திணிக்கப்படுகின்றன. இத்தனைக்கும் தேநீர் அருந்தியவர் நீரிழிவு நோய் காரணமாக சீனியற்ற தேநீரைப் பருகியவராகக் கூட இருக்கலாம்.

இதேவேளை, அந்நபர் அடிக்கடி தேநீர் அருந்தும் பழக்கம் உள்ளவராக இருந்தால் நகருக்குச் சென்று திரும்புகையில் அவா கையில் பத்துப் பதினைந்து டொபிகள் காணப்படுவது தவிர்க்க இயலாததாகிவிடும். ஆனால், இது தனியாக உணவு விடுதிகளில் மட்டும் காணப்படும் ஒன்றல்ல. பொதுவாக தேநீர்ச்சாலைகளில் இருந்து மரக்கறிச் சந்தைவரையிலும் காணப்படும் ஒன்றாகவே உள்ளது. ஆயினும் இப்பிரச்சினையானது நகர்களில் உள்ள உணவு விடுதிகளிலேயே அதிகமுள்ளது. கிராமப்புறங்களில் இந்நெருக்கடி ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

ஆனால், இவ்விடயமானது சில்லறையுடன் சம்பந்தப்பட்ட விடயமாயினும் மக்களை வெகுவாகப் பாதிப்பதாகிறது. ஒருபுறத்தில் தேவையற்ற, விருப்பமற்ற பொருட்கள் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. இன்னொரு புறத்தில், மக்களின் வாழ்க்கைச் சுமைகள் அதிகரிக்கின்றது. குறிப்பாக ஏழை மக்கள் வெகுவாகப் பாதிப்பிற்குள்ளாகும் ஒன்றாகவும் இது உள்ளது. தமக்குத் தேவைப்படும் சகல பொருட்களின் பெறுமதிக்குரிய பணத்தை அவர்கள் வைத்திருப் பினும், இரண்டு மூன்று கடைகளில் தமது பொருட்களை அவர்கள் கொள்வனவு செய்ய வேண்டியதொரு நிலை ஏற்படுகையில் சில பொருட்கள் அவர் களினால் கொள்வனவு செய்யவே முடியாமல் போய்விடுகின்றது.

இதேவேளை, இச்சில்லறைத் தட்டுப்பாட்டினை வியாபாரிகள் போக்க முனைவதாகவும் தெரியவில்லை. ஏனெனில் அவர்களுக்கு இத்தட்டுப்பாடானது, மேலதிக வருவாய் ஈட்டும் ஒரு மார்க்கமாகவும் உள்ளது. குறிப்பாக நான்கு ரூபாவிற்கு டொபிகள் வழங்கும் போது அதில் வியாபாரிகள் 50 சதத்தில் இருந்து ஒரு ரூபாய் வரையில் இலாபம் ஈட்டுகின்றார்கள். சில வேளைகளில் இனிப்புக்களை விரும்பாதவர்கள் வெறுத்துப் போய் மிகுதியாய் உள்ள ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்களை விட்டுவிட்டுச் சென்றுவிடுவதும் கூட உண்டு.

மறுவளமாக சில்லறைத் தட்டுப்பாட்டின் காரணமாக 'டொபிகள்' வழங்கும் வியாபாரிகள் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் சில்லறைக்காக டொபிகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்றால் அதுவும் இல்லை. அதிலும் தாம் வழங்கிய 'டொபிகளையே' அதே வியாபாரிகள் கூட வாங்குவதற்குத் தயாராக இல்லை. அதாவது சில்லறைக்காய் பண்டங்களைப் பரிமாறத் தயாராக இருக்கும் வியாபாரிகள் சில்லறைக்காக அதே பண்டங்களைத் திருப்பிப் பெறத் தயாராக இல்லை. ஆகையினால் விவகாரம் ஒரு பணப் பொருளாதாரத்திற்குள் உட்பட்ட விடயமாகவும் இல்லை. பண்டமாற்றுப் பொருளாதாரத்திற்குள் உட்பட்ட விடயமாகவும் இல்லை.

ஆனால், இத்தகைய போக்கு அனுமதிக்கத்தக்கதொன்றாக இருக்க முடியாது. ஏனெனில் இது தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்பைத் தேடும் ஒன்றாகவும், வியாபாரிகளும், ஆதாயம் தேடும் நடவடிக்கையாகவுமே இருக்கமுடியும். மறுவளமாக ஏழை மக்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கும் ஒன்றாகவும் உள்ளது. ஆகையினால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் கண்டறியப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மிகுதிச் சில்லறை கேட்பவர்களிடம் சில வியாபாரிகள் காசை மாற்றிக் கொண்டு வரும்படி கூறுவதும் உண்டு. அது சட்டத்திற்குப் புறம்பானதொரு நடவடிக்கையாகும். கடைகளில் உள்ள பொருட்களை நுகர்வோருக்கு வழங்க வேண்டியதும், புழக்கத்தில் உள்ளபணத்தினை – நோட்டுக்களை – பெற்றுக் கொண்டு மிகுதிப்பணத்தினை வியாபாரிகள் வழங்கவேண்டியதும் அவர்களின் கடமையும் ஆகும். அவ்வாறு இல்லாதுவிட்டால் அது ஒரு சட்டவிரோத நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆகையினால், இச்சில்லறை நெருக்கடிகளைப் போக்க வியாபாரிகளும், அதனுடன் தொடர்புபட்ட அரச தரப்பினரும் அக்கறை காட்டுதல் வேண்டும். அவ்வாறு செயற்படாது விடுதல் ஒரு மோசடித்தனமான செயலாகவே கருதத்தக்கதாக இருக்கும். இது ஏழ்மையிலுள்ள மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிக்கும் நடவடிக்கையும் ஆகும். அதாவது சில்லறைப் பிரச்சினை என்பது சிறிய பிரச்சினையல்ல. மக்களின் வாழ்வாதாரத்துடன் கூடிய பிரச்சினையாகும்.

# சனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்தாவிடில் நாட்டைப் பிரிக்க துணை போவதாகக் கருதப்படும்

## -அத்துமலிய ரத்ன தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் பற்றிய கருத்துக்களை அறியும் வகையில் பத்திரிகையாளரின் சந்திப்பின் போது பேசிய அத்துமலிய ரத்ன தேரர் லொத்தர் சபையைப் பொறுப்பேற்ற அவசரம் நாட்டுப் பிரச்சினைகளில் சனாதிபதிக்குக் கிடையாது. அது அவசியமற்றது என்று கருதுகிறார் எனக் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறும் போது, வடக்கு-கிழக்கு இணைப்பை, நிறைவேற்று அதிகாரத்தை உபயோகித்து தற்காலிகமாக நீக்குமாறு தாம் சனாதிபதியைக் கோரியுள்ளதாகவும் டோக்கியோ மாநாட்டின் மூலம் புலிகளுக்குக் கிடைக்கும் உதவிகளைச் சனாதிபதி தலையிட்டுத் தடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளேன். இதற்குச் சனாதிபதி இணங்கவில்லையாயின் ரணிலுடன் சேர்ந்து நாட்டைப் புலிகளுக்குப் பிரித்துக் கொடுக்க சனாதிபதி நடவடிக்கை எடுப்பதாக எண்ண வேண்டி வரும்.

வழங்கப்படும் இடைக்கால சபை எவ்வாறானதாகும் என நான் பிரதமரை வினவ இருக்கிறேன். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட புலிகள் பல மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாட்டுத் தூதுவர்களும் போலி வேடம் போட்டுப் புலிகளுடன் பேசி வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார். அங்கு உரையாற்றிய மேலும் ஒரு பிக்கு தெரிவிக்கையில், நாங்கள் நாட்டின் பிரச்சினைபற்றி சிந்திப்பது அரசியல் ரீதியாகவோ எந்தக் கட்சி ஆட்சியமைக்கப்போகின்றதோ என்பதை அல்ல. நாட்டின் அபிவிருத்தி பற்றியும் பாதுகாப்புப் பற்றியுமே நாம் கவலையடைகின்றோம் என்றார். நாம் சனாதிபதியையோ பிரதமரையோ விமர்சிக்கவில்லை. அதேநேரம் பிழையான வழிகளில் செல்வோரைத் தட்டிக்கேட்பதும் எமது கடமையாகும் என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், இது ஒரே நாடு. ஆகவே சர்வதேச மகாநாடுகளுக்கு அரசாங்க பிரதிநிதிகள் மட்டுமே செல்லலாம். நோர்வே அரசு எமது நாட்டின் பிரச்சினையில் தலையிட்டு தமது சமயத்தை போதிக் கவும், முதலீடு செய்யவும் முயற்சிக் கின்றது. வடக்கு - கிழக்கில் அனைத்து பௌத்த ஸ்தாபனங்களும் அழிந்துள்ளன. அவற்றைப் பற்றி சிந்திப்பதற்கு யாருமில்லை என்று கூறியுள்ளார். மேலும் பல பிக்குமார்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

## ஆயுர்வேத மருத்துவர்கள் வெற்றிடம் நிரப்பப்படும்

(கொழும்பு)

நாடெங்கிலும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒரு தொகுதி ஆயுர்வேத மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் 80 மருத்துவர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. புதிய மருத்துவர்களை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல்கள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

பலவருட காலத்தின் பின் ஆயுர்வேத மருத்துவர்கள் அரசாங்கசேவையில் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

# "முன்னைய ஒப்பந்தம் ஒன்றிற்காக றஞ்சித்தைக் கொலை செய்தேன்"

## -பாதாளக் குழுத் தலைவர்

தென்மாகாணசபை அமைச்சர் றஞ்சித் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 4 பேரில் ஒருவர் 30 கொலைகளைச் செய்த பொலிஸ்காரர் என்றும் ஒருவர் முன்னாள் சனாதிபதி ஜயவர்த்தனாவை ஏமாற்றிய பேர்வழி எனவும் அமைச்சரோடு பல பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட அவர் அவரைப் பழி வாங்கும் நோக்கில் கொலை செய்ததாக சூரியவெவ பாதாளக் குழுத்தலைவர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் கூற்றுப்படி முன்பு வைத்தியசாலையில் கைதுசெய்யப்பட்ட ராகுல என அழைக்கப்படும் ஜயவர்த்தனவே பிரதான சூத்திரதாரி எனத் தெரிய வருகிறது.

இவர் போலி காணி உறுதியைச் சமர்ப்பித்து முன்னாள் சனாதிபதி ஜயவர்த்தனவுக்குச் சொந்தமான காணியை அபகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கஞ்சாவுடன் சிப்பாய் கைது

வவுனியா சிறிலங்கா இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ கோப்ரல் ஒருவர் இரண்டரைக் கிலோ கஞ்சாவுடன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறையில் வீடு வந்தவர், மீண்டும் தொழிலுக்குத் திரும்பும் போதே தனமல்விலப் பொலிசார் இவரைக் கைதுசெய்து, கஞ்சாவினையும் கைப் பற்றியுள்ளனர்.

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரியர் பயிலுனர்கள் கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இப்பாடசாலையில் கல்வி கற்கும் தாய் தந்தையரை இழந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் உட்பட பல பெறுமதியான கற்றல் உபகரணங்களை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி. நடேசமூர்த்தியிடம் கையளித்துள்ளனர். (10)

# வெடிபொருட்கள் அகற்றப்படாமையால் அரியாலை மீள்குடியேற்றம் தாமதம்!

அரியாலை மணியந்தோட்டப் வாசிகள் பகுதி நிரந்தர வாசிகள் முள்ளி என்ற இடத்தில் வெடி பொருட்கள் அகற்றப்படாமையால் தாம் தற்காலிக வீடுகளை அமைத்து மீளக் குடியமர முடியாதுள்ளதாக நல்லூர் பிரதேச செயலருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

650 குடும்பங்களைக் கொண்ட மணியந்தோட்ட வாசிகள் தமது பகுதி இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்துள் அடங்குவதால் அவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இம் மக்கள் தற்போது உறவினர்களின் வீடுகளிலும், முகாங்களிலும் பாஷையூர், குருநகர், நாவாந்துறை, ஈச்சமோட்டை ஆகிய இடங்களில் வாழ்க்கை நடத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவர்களை நல்லூர் பிரதேச சபையினர் முள்ளி என்ற இடத்தில் தற்காலிகமாகக் குடியமர்த்த நடவடிக்கை மேற் கொண்டனர். இவர்களே மேற்படி வெடிபொருட்கள் அபாயம் பற்றி மீண்டும் பிரதேச சபைக்கு அறிவித் துள்ளனர்.

இதுதொடர்பாக பிரதேச சபையி னர் இம்மக்களின் அவல நிலைக்கு அவர்கள் குடியேற விரைவில் வசதி செய்து தரப்படவேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சிறிலங்காவுக்கு முதல் வெற்றி!

சிறிலங்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மேற்கிந்திய பார்படோஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய சிறிலங்கா அணி 201 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் 1-0 என்ற நிலையில் சிறிலங்கா அணி முன்னிலையில் உள்ளது.

## ஸ்ரீவ் வோவுக்கு அழுத்தம்!

இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் ஸ்ரீவ்வோ கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்து வரும் ஸ்ரீவ்வோ இக்கட்டான சூழ்நிலையில் சிறப்பாக ஆடி பல முறை அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார்.

இருந்தபோதிலும் இளைஞர்களைக் கருத்திற் கொண்டும், அவுஸ். அணியின் எதிர்காலம் குறித்தும் ஸ்ரீவ்வோ ஓய்வுபெறுவது நிரந்தரமாகும் என அவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.



- பொலித்தீனின் பாதிப்பைக் கட்டுப்படுத்த -

# கழிவுப் பொலித்தீன்களைக் கொள்வனவு செய்ய முல்லை. உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

பொலித்தீன் பாவனையால் சூழலில் ஏற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பொலித்தீன் கழிவுகள் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் சகல பிரதேச சபைகளும் கழிவுப் பொலித்தீன்களை ஒரு கிலோ 100 ரூபா வீதம் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளன. எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையும் உங்கள் பிரதேசங் களில் உள்ள பிரதேச சபைகளிடம் பொலித்தீன்களைக் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொள்வதோடு சூழலைப் பாதுகாத்துக்கொள்ள உதவுமாறுதமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (பா)

## வாளியிலிருந்த நீரில் மூழ்கி குழந்தை பரிதாப மரணம்!

(அலுவலக செய்தியாளர்)

வவுனியாவில் ஒரு வயதுடைய குழந்தையொன்று நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா தேக்கவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது வீட்டுப்பாவனைக்காக வாளியில் அள்ளிவைக்கப்பட்டிருந்த தண்ணீரில் இறங்கி விளையாடிய போது மூச்சுத்திணறி இக்குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

## யாழ்.குடாநாட்டிற்கு அமெரிக்க அரசியல் விவகார உத்தியோகத்தர்

யாழ். குடாநாட்டில் அரசியல் விவகார உத்தியோகத்தர் ஒருவரை அமெரிக்க தூதரகம் நியமிக்கவுள்ளது.

இந்த உத்தியோகத்தர் தொடர்ந்தும் யாழ். குடாநாட்டில் பணியாற்றும் முகமாகவே நியமிக்கப்படுவார் என்று அமெரிக்க தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

இங்கு பிராந்திய அலுவலகத்தை நிறுவ அமெரிக்கத் தூதுவராலயம் ஆலோசனை நடத்தி வருகின்றது.

## பேராசிரியர் கைலாசபதி விருது யாழ். செய்தியாளர் தயாபரனுக்கு

(வடமராட்சி)

நெருக்கடியான சூழ்நிலையின் கீழ் செய்திகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டமைக்கான பேராசிரியர் கைலாசபதி விருது கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டைச் சேர்ந்த செய்தியாளர் சற்குணம் தயாபரனுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கை ஐக்கிய ஊடக ஆசிய பேரவையினால் 2002இற்கான விருதுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரான சற்குணம் தயாபரனுக்கு மேற்படி விருது வழங்குவது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு மோட்டலேனியா ஹொட்டலில் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை மறைந்த ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு மறைவிற்குப் பிந்தியதாக இவ்விருது கடந்த வருடத்திற்கு முதல் வருடம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (27)

## விசாவழங்குவதில் ஊழல் புரிந்ததை அமெரி.அதிகாரி ஒப்புக்கொண்டார்

அமெரிக்காவுக்கான விசா வழங்குவதில் ஊழல் புரிந்தமையை இந்தக் குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரஜை ஒப்புக்கொண்டார்.

அமெரிக்காவுக்கான விசா வழங்குவதில் ஊழல் புரிந்ததாக சிறிலங்காவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் ஒன்பது ஊழியர்கள் கைது செய்யப்பட்டு இவர்கள் மீதான விசாரணை கலிபோர்னியாவில் இடம்பெற்று வருகின்றது.

இதில் சாட்சிய மளிக்கும் போதே அமெரிக்க பிரஜை இவ்வாறு ஒப்புக் கொண்டார்.

## பாதாள உலகத்தலைவர்கள் போல் அமைச்சர்கள் செயற்படுகின்றனர்

### பொ.ஐ.மு.பா.உறுப்பினர் சாடல்

(கொழும்பு)

"அமைச்சர்கள் சிலர் பாதாள உலகக் குழுவின் தலைவர்கள் போன்று செயற்படுகின்றனர்" என்று எதிர்க்கட்சியான பொ.ஐ.மு கண்டிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 04 ஆம் திகதி பாராளுமன்ற கூட்ட ஒத்திவைப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் ஊழல்கள் மோசடிகள் அதிகரித்துக்காணப்பட்டன. விடுதியொன்றில் அடாவடித்தனம் புரிந்தமை, கண்டிமாவட்ட தேர்தல் ஆணையாளரைத் தாக்கியமை, மாகாண அமைச்சரைக் கொலை செய்தமை போன்ற பல விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் இவைகளைப் பாதாளக் குழுவின் தலைவர்களே செய்வர். ஆனால் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இவற்றோடு தொடர்புடையோராய் இருப்பதால் அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டியுள்ளது எனவும் தென்னக்கோன் கூறியுள்ளார்.

### கிளி.யில்......

பம், கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வ.இளங்குமரன் ஏற்றி வைத்தார். கிளிநொச்சி தமிழ்ச்சங்கக் கொடியை கிளி.தமிழ்ச்சங்கத் தலைவர் கனகரத்தினம் ஏற்றி வைத்தார்.

மேற்படி நிகழ்வுகள் யாவும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் முனைவர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றன. இதன் தொடர்ச்சியாக இன்றும் நிகழ்வுகள் நடைபெறும். (லோ)

### சிரமதானம்

(வட்டக்கச்சி)

சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு வட்டக்கச்சி வைத்தியசாலை, மக்களின் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. அத்துடன் இளங்கதிர் சனசமூக நிலைய வளவும் சிரமதானம் மூலம் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. (12)

### இலவச பற்சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினரால் இலவச பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 06ஆம் திகதி மேற்படி பாடசாலையில் பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் வைத்தியர் செல்வி தலைமையில் இடம்பெற்றது. இதன் மூலம் 85 பேர் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## புனரமைக்கப்படும் குளங்களை உலக வங்கி பிரதிநிதி பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்திட்டமூலம் புனரமைக்கப்பட்டு வரும் குளங்களை உலக வங்கிப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

ஒலுமடுக்குளம், அம்பகாமம்குளம் ஆகிய குளங்களை உலக வங்கிப் பிரதிநிதிகளான நிகால் பெனான்டோ ஜெகநாதன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், முல்லை மாவட்ட நியாப் திட்ட பணிப்பாளர் எஸ் சிவகுமார் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் இ. மாறன், வவுனிக்குளம், முத்தையன் கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவனடியார், முல்லை மாவட்ட சமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், முல்லை மாவட்ட தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறியியலாளர் ஆகியோர் இவ் உலக வங்கிப் பிரதிநிதிகளை வரவேற்று குளங்கள் வீதிகளைப் பார்வையிட்டதோடு அப்பகுதி சமக்கார அமைப்புக்கள் விவசாயிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (பா)

### தமிழ்.....

வாறு கடந்த 2000 ஆம் ஆண்டு களில் சிதைந்திருக்கின்றது எனக் காட்டுகின்றது. இந்த தமிழ் மொழித் தூய்மையை பேணாத நிலையில் எமது மொழியிலே பிறமொழி ஊடுருவலை நிறைய விட்டு தமிழ் மொழியும் தமிழ் மண்ணும் பறிபோய் உள்ளது.

எனவே நாங்கள் மண்ணை மீட்கின்ற போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற போது, நாங்கள் போராட்டத்தில் வெற்றி பெறுகின்ற போது உண்மையான தமிழர்களாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரெஞ்சு ஓப்பன் டெனிசில் ஸ்பெயின் நாட்டு வீரர் சம்பியன்

கிறாம்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓப்பன் டெனிஸ் போட்டியின் 2003 ஆம் ஆண்டுக்கான சம்பியன்பட்டத்தை ஸ்பெயின் நாட்டின் வீரர் பெரேரோ கைப்பற்றிக் கொண்டார்.



கடந்த இரு வாரங்களுக்கு மேலாக நடைபெற்றுவந்த பிரெஞ்சு ஓப்பன் டெனிஸ் போட்டி நேற்றுடன் நிறைவு பெற்றது.

கடைசி நாளான நேற்று ஆடவர் ஒற்றையருக்கான இறுதிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவரும் மூன்றாம் நிலை வீரருமான பெரேரோ கிறாம்ஸ்லாம் போட்டிக்கு புது முகமான போலந்து நாட்டின் மாலன் வெஸ்றெக்கை எதிர்கொண்டார்.இதில் பெரேரோ 6-1, 6-3, 6-2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். இதன் மூலம் அவர் பத்துக்கோடி ரூபா பணப் பரிசையும் பெற்றுக் கொண்டார்.

## மன்னார் பி.செ. பிரிவு முதலாம் இடம்பெற்றது

(மன்னார்)

மன்னார் மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று நிறைவடைந்தன.

மன்னார் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மேற்படி இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கமும், மேலதிக அரச அதிபரும் கலந்து கொண்டனர்.

இதில் முதல் இடத்தை மன்னார் பிரதேச செயலர் பிரிவும், இரண்டாம் இடத்தை மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், மூன்றாம் இடத்தை நானாட்டான் பிரதேச செயலர் பிரிவும் கைப்பற்றிக் கொண்டன.

## கிடைக்கும் நிதியுதவிகளுக்கு அரசாங்கமே பொறுப்பாயிருக்கும்

### அமைச்சர் மிலிந்த மொறகொட

(டோக்கியோ)

டோக்கியோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பெறப்படும் நிதியுதவி நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படியே செலவிடப்படும்.

கிடைக்கும் அனைத்து நிதியுதவிகளுக்கும் அரசாங்கமே பொறுப்பாகவிருக்கும் என சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான கைத்தொழில்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.ஜப்பானில் வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில்; புலிகளைப் போன்ற கெரில்லா இயக்கத்துடன் அரசாங்கம் கவனமாக நடந்துகொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறது. பேச்சுவார்த்தையின் சகல கட்டங்களிலும் எல்லா நேரத்திலும் இணக்கப்பாட்டுடன் போகமுடியாது எனத்தெரிவித்தார்.

## சாவு அறிவித்தல்

### உயர்திரு. தம்பையா செல்லத்துரை (விதானையார்)

(பரந்தன் முன்னாள் கிராமசபைத் தலைவரும், பரந்தன் 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டி பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவரும்)

இவர் பளை மாசாரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி.தம்பையா அவர்களின் மகனும், முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் திரு.திருமதி.விளாசித்தம்பி அவர்களின் மருமகனும், திரு.தம்பையா ஏரம்பரின் மைத்துனரும், சண்முகத்தின் ஒன்றுவிட்ட சகோதரரும், சேதுப்பிள்ளையின் கணவரும் ஆவார்.

காலஞ்சென்ற திருநாவுக்கரசு (3ஆம் வாய்க்கால்), திலகவதி, இராசலட்சுமி, சாந்தநாயகி, வரதராஜன், கமலாம்பிகை (ஆசிரியர்-வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), புவனேஸ்வரி (ஆசிரியை-கொழும்புத்துறை மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவாளர் வைரமுத்து (முன்னாள் உரிமையாளர் திருப்பதி காட்வெயார், யாழ்ப்பாணம்), திரு.அம்பலவாணபிள்ளை (தபாலதிபர் - கைதடி), திரு.தமிழ்வாசன் (கிராமசேவையாளர் -நெடுங்கேணி), திரு.நாகராசா, கணனி அலுவலர், பிரதேச சபை செயலகம்-வவுனியா), திரு.குருகதாஸ், திருமதிகள் சரோஜினிதேவி, பிரபாலினி (ஆசிரியை-வவுனியா, தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற ரிஜிகாந் (கண்ணன்), ரவீந்திரநாத், மிராளன், தவராஜன், நந்தகுமார், சுபாஜினி, ராஜ்குமார், தயானி, தர்சினி, பிரதீபன், பிரசன்னா, மாதுமை, மதுரா, சாய்மீரா, உமையாள், மாதங்கி, வேந்தன், நிவேதனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல:20, கற்குழி, வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு தோணிக்கல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல:20,
கற்குழி, வவுனியா.
(தொ.பே. 024-21 656) (சி-7899)

தகவல்:-
வரதராஜன் (மகன்)
3ஆம் வாய்க்கால்,
பரந்தன்.